# MIN ALAI

# மின் அலை

August 2022 | Volume : 10 | Issue 08 | Price Rs. 21.00/- | Ann. Sub. Rs. 250/-



மாண்புமிகு தமிழக முதல்வர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.08.2022 அன்று மின்வாரிய தலைமை அலுவலகத்தில் மின்னகத்தை ஆய்வு செய்ய வந்த போது நமது பொதுப் பொருளாளர் நினைவு பரிசு வழங்கினார்.



**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**

பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

தலைவர் **பொர்.A.அந்தோணிபடோவராஜ்**

பொதுச் செயலாளர் **பொர்.V.S.சம்பத்குமார்**

பொதுப் பொருளாளர் **பொர்.G.கார்த்திகேயன்**



உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி கோயம்புத்தூர் கிளையின் சங்க கட்டிடம் மின்வாரிய பொறியாளர் சங்கத்திடம் 04.08.2022 அன்று ஒப்படைக்கப்பட்டது.



மின் வாரிய தலைமையகத்தில் மின் விநியோக வட்ட மறு சீரமைப்பு தொடர்பாக வாரியம் மற்றும் தொழிற் சங்கங்களின் கூட்டு குழு ஆலோசனைக் கூட்டத்தில் நமது சங்க பொதுச் செயலாளர் உரையாற்றுகிறார்.

ஆசிரியர்
**பொர்.R.சந்தோஷ்குமார்**
9962719617

**ஆசிரியர் குழு**

**பொர்.A.அந்தோணிபடோவராஜ்**
**பொர்.V.S.சம்பத்குமார்**
**பொர்.G.கார்த்திகேயன்**
**பொர்.N.R.செந்தில்**
**பொர்.R.K.நரசிம்மன்**
**பொர்.K.பிரபாகரன்**

| Page | Contents |
|---|---|
| 07 | அமைச்சர் உரை, பொதுக் குழு தீர்மானங்கள் |
| 11 | REPRESENTATION |
| 14 | BOARD ORDERS |
| 23 | தகவல் பெறும் உரிமைச் சட்டம் – 2005 |
| 30 | ஒழுங்கு நடவடிக்கை |
| 32 | பணிப்புறக்கணிப்பு போராட்டம் |
| 37 | பணி ஒய்வு |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9841150516**

**மின் அலை**

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்**

**மலர் 10 ஆகஸ்ட் 2022 இதழ் 08**

## கூட்டு பேர சக்தி

மின்சார வாரிய பணியாளர்களின் நியாயமான உரிமைகளை ஒவ்வொன்றாக பறித்திடும் வண்ணமாக சமீப காலங்களில் வாரிய நிர்வாகத்தின் செயல்பாடுகள் அமைந்துள்ளன. DA, SLS போன்ற பணப்பலன்கள் முற்றிலுமாக மறுக்கப்பட்டது என்பதுடன், முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிராக B.P.2ன் மூலம் மின்வாரிய பணியாளர்களுக்கு அடிமை விலங்கு பூட்டப்பட்டது. திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் மதுரை இயக்க வட்டங்களுக்கு பராமரிப்பில் out sourcing விடப்பட்டன. "உள்முக தேர்வுகள்" என்ற இயற்கை நீதி அனைத்து நிலைப்பணிகளுக்கும் 07.06.2022 பிறகு இல்லை என்ற இன்னொரு சம்மட்டி அடியை பணியாளர்களின் மீது இறக்கியுள்ளது.

எதிர் நிற்பவர்களே நமது ஆயுதத்தை நிர்ணயிக்கிறார்கள் என்ற அடிப்படையில், தொழிற் சங்கங்களை கலந்தாலோசிக்காமல் முடிவுகள் எடுத்து, மின் பணியாளர்களை பாதிப்படைய செய்பவர்கள் மீது JAC, "காத்திருப்பு போராட்டத்தை" கைக் கொண்டபோது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திட அழைப்பு வந்தது. காத்திருப்பு போராட்டம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டு, தொழிற்சங்கங்கள் நம்பிக்கையுடன் பேச்சு வார்த்தையில் கலந்துகொண்டன. இரண்டு நாட்களில் தீர்வு வழங்கப்படும் என மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

புதிய மின்சார சட்டதிருத்த மசோதாவானது 08.08.22 அன்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட போகிறது என்பதை தெரிந்த NCCOEEE அமைப்பு அகில இந்திய அளவில் மின் வாரிய பணியாளர்களின் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் JAC ன் சங்கங்கள் பணி முடக்க போராட்டத்தை முன்னெடுத்தன, போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. மின்சார சட்டத்திருத்த மசோதாவானது பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, எதிர்கட்சி உறுப்பினர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்ட நிலையில், பாராளுமன்ற நிலைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்தி வைக்கப்பட்டது. அகில இந்திய அளவில்

மின்பணியாளர்களது போராட்டத்தின் விளைவாக இந்த நிலையை அரசு மேற்கொண்டதாக கருதப்படுகிறது.

மேற்படி இரு நிகழ்வுகளில் 20.07.2022 அன்றைய முதல் நிகழ்வு காத்திருப்பு போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களில் தீர்வு கிடைக்கும் என 20.07.2022 அன்று ஊடகங்களுக்கு தெரிவித்தார். வாரிய நிர்வாகம் நியாயமாக நடந்து கொண்டிருந்தால் B.P.2ஐ ஒரே நாளில் ரத்து செய்து இருக்கலாம். திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் மதுரை இயக்க வட்டங்களுக்கான out Sourcing அனுமதியை ஒரே நாளில் ரத்து செய்து இருக்கலாம். ஆனால் இந்நாள் வரை மாற்றம், முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் தீர்வினை எதிர் நோக்கி நாட்கள் கடந்த நிலையில் “ஒட்டகூத்தன் பாட்டிற்கு இரட்டை தாழ்ப்பாள் போல” வாரியம், பொறியாளர்களின் பணி இடங்ளை குறைப்பது, செயலகம் மற்றும் பணியமைப்பு நிர்வாகத்தை இணைப்பது, வருவாய் மாவட்டங்களுக்கு இணையாக திட்ட நிர்வாகத்தை மாற்றுவது என்ற நிலைப்பாடுகளை கையெடுத்ததால், வெகுண்டெழுந்த தொழிற்சங்கங்கள் தமது எதிர்ப்பினை JAC மூலம் தொடர் போராட்டமாக வடிவமைத்த நிலையில், வாரிய நிர்வாகம் நீண்ட நாட்களுக்கு பிறகு திட்டமிட்ட பேச்சு வார்த்தைக்கு தொழிற்சங்கங்களை 24.08.2022 அன்று அழைத்தது, பேச்சு வார்த்தையில், வாரியச் செயல்பாடுகள் எத்தகைய அபாயகரமான பாதையில் செல்கின்றது என்பதை தொழிற் சங்கங்கள் அறுதியிட்டு எடுத்துரைத்தனர்.

மின்வாரிய பணியாளர்கள் ஒவ்வொருவரும் ஆயிரக்கணக்கில் பண இழப்பை சந்தித்து வருகின்றார்கள், அனைத்து பணி நிலையிலும், மன அழுத்தத்துடன் பணியாற்றுகின்றனர். தாங்கள் இழப்பதற்கு இனி ஏதுமில்லை என்ற நிலையில், தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த தொடங்கியுள்ளனர்.


கூட்டு பேர சக்தியின் செயல் வடிவம் பேச்சு வார்த்தையில் தான் துவங்குகிறது. அதை தவிர்ப்பதும், தள்ளிப்போடுவதும் தொழிலக அமைதியை குலைத்து, தொழில் நல்லுணர்வை பாதித்து கடுமையான எதிர் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். மின்வாரிய கூட்டுக்குழு தொழிற் சங்கங்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாக உணரும் நிலையில் போராட்ட வெளிப்பாடு தீவிரமாக காணப்படும்.

21.12.2020 மீண்டும் நிகழ்வது என்பது வாரியத்திற்கும் அரசுக்கும் அழகல்ல. எதிர் நிற்பவர்களே, நமது ஆயுதத்தை நிர்ணயிக்கிறார்கள் என்பதை வாரியம் உணருமா?

---

## <u>பொதுச்செயலாளர் கடிதம்</u>

அன்பு பொறியாளர்களே
வணக்கம் !



பொறியாளர் சங்கம் பலகட்ட போராட்டங்களை நடத்தி பல்வேறு தடைகளைக் கடந்த தன் உறுப்பினர்களுக்கு பெற்றுத்தந்த “உள்முகத் தேர்வு” என்ற வரப்பிரசாதம் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக வாரியத்தில் பின்பற்றப்பட்டு வந்த நிலையில், இன்று வாரிய ஆணை எண்.5 நாள் 07.07.2022 மூலமாக 07.06.2022க்குப் பின்னால் உயர்கல்வி பயின்றவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அவசியமில்லை என்ற உத்தரவினை வாரியம் வெளியிட்டுள்ளது. இதனை உடனடியாக திரும்ப பெற வலியுறுத்தி விரிவான முறையீடு வாரியத்தலைவரிடம் கடந்த 25.07.2022 அன்று அளிக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் பணி ஓய்வு பெறவுள்ள பொறியாளர்களின், உதவி செயற்பொறியாளர்/ மின்னியல் பதவி உயர்வுகளை உடனடியாக வழங்கவும், இளநிலை பொறியாளர்/மின்னியல் இரண்டாம் நிலை பதவி உயர்வுற்கான பணி அனுபவ கால வரம்பினை தளர்த்தி பதவி உயர்வுகள் வழங்கிட அனுமதியளித்திடவும்

விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

நமது முறையீட்டினைத் தொடர்ந்து உதவி செயற்பொறியாளர்/மின்னியல் பதவி உயர்வுகள் 25 இளநிலைப் பொறியாளர் மற்றும் 75 உதவி பொறியாளர்களுக்கு கடந்த 28.07.2022 அன்று Temporary Panel வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்ற பொறியாளர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். இதற்காக வாரியத் தலைவர், வாரிய செயலாளர், துணை தலைமை பொறியாளர்/பணியமைப்பு மற்றும் பணியமைப்பு நிர்வாகப் பணியாளர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்துறையில் தனியார் மயமாக்கலை எதிர்த்து நாம் 2014ம் ஆண்டு முதல் தொடர்ச்சியான பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்த போதிலும், தொழிலாளர்களின் உணர்வுகளை உதாசீனப் படுத்தும் வகையில் மத்திய அரசு கடந்த 08.08.2022 அன்று மின்சார சட்ட திருத்த மசோதா 2022ஐ பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய முடிவெடுத்து, அதற்கான முன்னேற்பாடுகளை விரைவுபடுத்தியது. இதனைத் தொடர்ந்து NCCOEEE மற்றும் AIFOPDEன் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு மின்சார வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு சார்பாக மசோதா தாக்கல் செய்யப்படும் நாளன்று காலை 08.00 மணி முதலே தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மின்வாரிய பிரிவு மற்றும் மத்திய அலுவலகங்கள் முன்பாகவும் பணிகளை முடக்கி கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட முடிவெடுக்கப்பபட்டது

நாட்டின் முன்னேற்றத்தை நிர்ணயித்திடும் மின்துறையில் புகுத்தப்பட உள்ள பாதகமான அம்சங்களை கொண்ட மின்சார சட்டதிருத்த மசோதா 2022 யை எதிர்த்து அனைத்து தொழிற் சங்கங்களின் உறுப்பினர்களும் திரளாக ஓரணியில் திரண்டு மிக வலுவான போராட்டங்களை தமிழகம் முழுவதும் வெற்றிகரமாக 08.08.2022 அன்று நடத்தியுள்ளோம். மேலும் மசோதா தாக்கலாவதற்கு முன்தினம் தமிழகத்தின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மின்சார சட்ட திருத்த மசோதாவில் பொதுமக்களைப் பாதிக்கும் தனியார்மய நடவடிக்கைகள், விவசாய இலவச மின் இணைப்புகள், மின் விகிதப்பட்டி அமைப்பதில் உள்ள மாநிலங்களின் அதிகாரம் பறிக்கப்படுதல், மின் வழங்குதலில் மாநில அரசின் உரிமைகள் ஆகியவை குறித்து விளக்கமான நமது முறையீட்டினை அளித்துள்ளோம்.

பாராளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்ட போது நமது தமிழக பாராளுமன்ற உறுப்பினர் திரு.T.R.பாலு, M.P தனது உணர்ச்சி பூர்வமான எதிர்ப்பினை தமிழகம் சார்பில் பதிவு செய்துள்ளார்கள். கேரளம், மேற்கு வங்கம், உத்திரபிரதேசம் உள்ளிட்ட பல மாநிலங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பினைத் தொடர்ந்து மசோதா பாராளுமன்ற நிலைக் குழுவிற்கு பரிசீலனை அனுப்பப்படவுள்ளதாக மாண்புமிகு மத்திய மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார். நீண்ட காலமாக மின்துறை தொழிற்சங்கங்களும், பணியாளர்களும், பொறியாளர்களும், அலுவலர்களும் மற்றும் விவசாய அமைப்புகளும் மேற்கொண்டு வரும் தொடர் போராட்டங்களின் பயனாக மசோதா ஒப்புதல் அளிக்கப்படுவது தற்காலிகமாக தடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு எந்நேரமும் மீண்டும் தனியார் மய நடவடிக்கைகளை முடுக்கிவிடலாம். அனைத்து பணியாளர்களும் தொடர்ந்து ஒற்றுமையுடனும், எந்நேரமும் எந்தவொரு போராட்டத்திற்கும் தயார் நிலையிலும் இருக்க அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் AIFOPDE சார்பில் வரும் நாட்களில் மின்துறையின் அனைத்து பொறியாளர்கள், பணியாளர்கள், மற்றும் அனைத்து நுகர்வோர் மற்றும் விவசாயிகள் ஆகியோருக்கு மின்சார சட்ட திருத்த மசோதாவின், பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த 22.08.2022 அன்று 36 உதவி செயற்பொறியாளர்களுக்கு செயற்பொறியாளர்/இயந்திரவியல் பதவி உயர்வுக்கான தகுதிகாண் அறிக்கைகள் கோரப்பட்டுள்ளது. இளநிலைப்பொறியாளர்/இயந்திரவியல் இரண்டாம் நிலையிலிருந்து இளநிலைப் பொறியாளர்/இயந்திரவியல் முதல் நிலை பதவி உயர்வு, நீதிமன்ற வழக்கு காரணமாக கால தாமதப்பட்டுவருகிறது. நீதிமன்ற வழக்கில் சங்கம் தன்னையும் இணைத்துக் கொண்டு வழக்கு விசாரணையை துரிதப்படுத்தியுள்ளோம். வழக்கு பட்டியலிடப் பட்டாலும் விசாரணைக்கு வருவது தாமதப்பட்டு வருகிறது. விரைந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இளநிலைப்பொறியாளர்/மின்னியல் முதல்நிலை பதவி உயர்விற்கான தகுதிகாண் பட்டியல்கள், மற்றும் PAR சரிபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. கோரப்பட்டுள்ள தகவல்கள் (PAR) இன்னும் முழுமையாக தலைமையகத்தை வந்தடையவில்லை. கிளைப் பொறுப்பாளர்கள் உடனடியாக தகவல்கள் அனுப்பப்படுவதை உறுதி செய்திட வேண்டுகிறேன்.

விநாயக மிஷன் மற்றும் பெரியார் மணியம்மை பல்கலைகழகங்களில் பட்டம் பெற்று உள்முகத்தேர்வில் விடுபட்ட பொறியாளர்களின் உள்முகத்தேர்வு உத்தரவுகளை உடனடியாக வழங்கிட தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

Redeployment முறையினை முழுமையாக கைவிட நாம் தொடர்ந்து வாரியத்தினை வலியுறுத்தி வந்த போதிலும் வாரிய நிர்வாகம் தொடர்ந்து தனிச்சையான முடிவுகள் மூலமாக வாரிய உத்திரவுகள் வழங்குவதையே வாடிக்கையாக கொண்டுள்ளனர். உதாரணமாக, BP.162 நாள். 18.08.2022 இரண்டு தலைமைப் பொறியாளர் பணியிடங்கள் பறிப்பு, பணியமைப்பு நிர்வாகத்தின் 17.08.2022 தேதியிட்ட கடிதம் செயற்பொறியாளர், உதவிசெயற்பொறியாளர், உதவிப்பொறியாளர், கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், மற்றும் கணக்கு மேற்பார்வையாளர் ஆகிய பதவிகளின் அனுமதிக்கான நியாயமான காரணம் கேட்பு (Justifcation) ஆகிய முற்றிலும் முரணான, பணியாளர் விரோத நடவடிக்கைகளை மின்வாரியம் மேற்கொள்ள துவங்கியுள்ளது.

இதனை உடனடியாக எதிர்த்து தடுத்து நிறுத்திடும் பொருட்டு, மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் 22.08.2022 அன்று சென்னையில் நடைபெற்றது. கூட்டத்தில் நாம் மேற்கொள்ள வேண்டிய தொடர் தீவிர நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆலோசனைகள் நடத்தி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த வாரியம், அனைத்து தொழிற்சங்கங்களுடனும் உடனடியாக பேச்சு வார்த்தை நடத்திட தீர்மானித்து, வட்டங்கள், மண்டலங்கள் மறுசீரமைப்பு தொடர்பாக 24.08.2022 அன்று திட்டமிட்ட பேச்சு வார்த்தை நடத்த அழைப்பு விடுக்கப்பட்டது. இயக்குனர்/விநியோகம் மற்றும் தலைமை பொறியாளர் / பணியமைப்பு (மு.கூ.பொ) அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். பொறியாளர் சங்கம் சார்பில் BP.162ஐ உடனடியாக திரும்ப பெறுதல், Redeployment முறையை முழுவதுமாக கைவிடுதல், துணை மின்நிலையங்களின் அயல் பணி ஒப்படைப்பு முறையை கைவிடுதல், BP.2ஐ ரத்து செய்தல், FOC பணியிடங்களை திரும்ப வழங்கிட வலியுறுத்துதல், தரமான தளவாட சாமான்களை தடையின்றி வழங்கிடுதல் ஆகியவை குறித்து வலியுறுத்தியும், வேலைப் பளு ஒப்பந்தத்தில் ஒப்பு கொண்டபடி புதிய துணை மின்நிலையங்கள், விநியோகப் பிரிவுகளுக்கு புதிய பணியிட அனுமதி அளித்தல், வட்டங்கள் மறுசீரமைப்பு ஆகியவைகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, தற்போது வாரியத்தலைவர் அவர்களுடன் 27.08.2022 அன்று பேச்சு வார்த்தை நடத்திட அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**நீதிமன்ற உத்திரவின்படி 04.08.2022 அன்று மாலை கோயம்பத்தூரில் உள்ள சங்கக்கட்டிடம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டது.**

இந்நிகழ்வில், கோவை கட்டிடம் வாங்கப்பட்டபோது சங்க பொறுப்பாளராக இருந்த பொர்.V.ஆறுமுகம், பொர்.V.M.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட மூத்த பொறுப்பாளர்கள், மாநிலத் தலைவர், பொதுப் பொருளாளர் உள்ளிட்ட மையப் பொறுப்பாளர்கள், கோவை மண்டல கிளை பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.அன்று மாலையே கட்டிடத்தில் சங்க பெயர் பலகை பொருத்தப்பட்டு பார்வையிடப்பட்டது. தற்போது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இக்கட்டிடம் மீண்டும் நம்மிடம் வர காரணமாக இருந்த மூத்த பொறுப்பாளர்களுக்கும் மற்றும் வழக்கறிஞர் குழுமத்திற்கும், கோவை மண்டல கிளை பொறுப்பாளர்களுக்கும் நன்றி.

மீண்டும் கொரோனா பெரும் தொற்று எண்ணிக்கை தமிழகத்தில் மெல்ல உயர்ந்து வருவதால் அனைவரும் மிகுந்த பாதுகாப்புடனும் எச்சரிக்கையுடனும் பணியாற்றிட வேண்டுகிறேன்.

நன்றி

அன்புடன்

**பொர்.V.S.சம்பத்குமார்**

பொதுச்செயலாளர்

## மின்சார சட்டதிருத்த மசோதாவால் தமிழ்நாட்டிற்கு ஆபத்து !... பட்டியலிட்ட அமைச்சர் செந்தில் பாலாஜி !

நாடாளுமன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க அரசு மின்சார சட்டத்திருத்த மசோதாவை தாக்கல் செய்துள்ளது, இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புகள் தெரிவித்து வருகின்றனர் மேலும் மின்சாரதுறையை முழுவதும் தனியார் மயமாக்கும் முயற்சி என ஒன்றிய அரசு மீது எதிர்க்கட்சிகளால் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. இந்நிலையில், ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மின்சார சட்டத்திருத்த மசோதா தொடர்பாக சென்னை தேனாம்பேட்டையில் அண்ணா அறிவாலயத்தில் தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.

அப்போது அமைச்சர் செந்தில் பாலாஜி நாடாளுமன்றத்தில் இன்று கொண்டு வரப்பட்ட மின்சார சட்ட திருத்த மசோதாவிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து எதிர்ப்பு குரலை பதிவு செய்து வருகிறார். ஏழை மக்களை இந்த மசோதா பாதிக்கும் எனவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுத்தலைவர் திரு.டி.ஆர்.பாலுவும் கடுமையாக இன்று மசோதாவை எதிர்த்து தி.மு.க.வின் குரலை பதிவு செய்தார். இந்த சட்ட மசோதா நிறைவேறினால் தனியார் துறைகள் மாநில அரசின் மின்சார கட்டமைப்பை இலவசமாக பயன்படுத்திக் கொள்வார்கள். மேலும் 1 லட்சத்து 59 ஆயிரம் கோடி கடன் பெற்று ஏற்படுத்திய தமிழ்நாடு அரசின் கட்டமைப்பை தனியார் துறை பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த மசோதா உள்ளது. விவசாயிகளுக்கு வழங்கும் மின்சாரம் 100 யூனிட் இலவச மின்சாரம், விசைதறி பயன் படுத்துவோருக்கு வழங்கும் மின்சாரம் என அனைத்தும் பாதிக்கப்படும். ஏழை மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் மாற்றி அமைக்கும் வகையில் மசோதா உள்ளது மின்சார திருத்த சட்ட மசோதாவிற்கு அ.தி.மு.க மற்றும் பா.ஜ.க. இது வரை எந்த எதிர்ப்பு குரலையோ, ஆர்ப்பாட்டமோ நடத்தவில்லை, மின்சார திருத்த சட்ட மசோதா நிலைக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டதற்கு காரணமே தி.மு.க. தான் இந்த மசோதாவை எதிர்த்து தி.மு.க தொடர்ந்து முழு குரல் எழும்பும் என தெரிவித்துள்ளார்

(மாண்புமிகு மின்துறை அமைச்சர் **திரு.செந்தில் பாலாஜி** அவர்கள் கலைஞர் தொலைக்காட்சி செய்தியில்)

---

## 54வது மாநில பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**1.** மாநில மின்சார வாரியங்களை தனியார்மயமாக்கும் வகையில் மத்திய அரசு கொண்டுவரவுள்ள மின்சார சட்டத்திருத்த மசோதாவை கைவிடக்கோரி மத்திய அரசுக்கு கடிதம் எழுதிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு இப்பொதுக்குழு நன்றியை தெரிவித்து கொள்கிறது.

**2.** உணவு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெறும் வகையில் விவசாயிகளுக்கு ஒரு லட்சம் மின் இணைப்பு வழங்கிட தமிழக அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் அவர்களுக்கும் இப்பொதுக்குழு பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது. அதேவேளையில் இந்த இலக்கினை குறுகிய காலக்கெடுவுக்குள் துரிதமாக செயல்பட்டு பணிகளை செய்து முடித்த மின்சார வாரிய பணியாளர்களை இப்பொதுக்குழு பாராட்டுவதோடு, இச்சாதனை மின்சாரவாரியம் பொதுத்துறையாகவே இருந்ததினால்தான் சாத்தியமாயிற்று என்பதையும் சுட்டிக்காட்ட

கடமைப்பட்டுள்ளது.

3. மக்கள் நலப் பணிகளை தொடர்ந்து செயல்படுத்திட தமிழ்நாடு மின்சார வாரியம் பொதுத்துறையாகவே தொடர்ந்திட தமிழக அரசை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

4. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமாக புதிய மின் உற்பத்தித்திட்டங்களை அறிவித்து விரைந்து செயல்பாட்டுக்கு கொண்டுவரும் அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்காக தமிழக அரசுக்கு இப்பொதுக்குழு பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

5. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தியை முழுவீச்சில் செய்து தமிழகத்தின் மின் தேவையை தொடர்ந்து பூர்த்தி செய்திட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

6. கொரோனா பெருந்தோற்று, இயற்கை பேரிடர் உள்ளிட்ட கடுமையான சூழ்நிலைகளிலும் சிறப்பாக பணிபுரிந்த மின்வாரிய பணியாளர்களுக்கு 01.12.2019 முதல் வழங்கவேண்டிய ஊதிய உயர்வினை உடனே வழங்கிட தமிழக அரசையும், மின்சார வாரியத்தையும் இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

7. காலியாக உள்ள தொழில் நுட்ப உதவியாளர் பதவிகளை பட்டய பொறியாளர்களை கொண்டு விரைந்து நிரப்பிட, தமிழக அரசையும், மின்வாரியத்தையும் இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

8. பொதுமக்களுக்கு தடையற்ற தரமான மின்சாரத்தை தொடர்ந்து வழங்க தளவாட பொருட்களை தடையின்றி வழங்கிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

9. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டுவந்துள்ள துணை மின் நிலையங்களுக்கு புதிய பணியிடங்களை அனுமதித்து அவைகளை நிரப்பிட மின்சார வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

10. வாரியத்தில் 01.04.2003 முதல் செயல்பாட்டில் இருந்துவரும் புதிய ஓய்வூதியத் திட்டத்தினை ரத்து செய்து, பழைய ஓய்வூதியத் திட்டத்தினை அனைத்து வாரிய பணியாளர்களுக்கும் செயல்படுத்திட தமிழக அரசையும், மின்வாரியத்தையும் இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

11. 57,000 காலி பணியிடங்களின் பணிப்பளுவையும் சேர்த்து கடுமையான சூழ்நிலையிலும், உயிரை துச்சமென மதித்து சிறப்பான மக்கள் பணியாற்றி வரும் மின்சார வாரிய பணியாளர்களுக்கு நிலுவையில் உள்ள பஞ்சப்படியை உடனடியாக வழங்கிட தமிழக அரசையும், மின்வாரியத்தையும் இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

12. தற்போது உயர்ந்து உள்ள அச்சு காகிதம் மற்றும் அச்சு கூலி விலை உயர்வுகளை கருத்தில் கொண்டு மின் அலை ஆண்டு சந்தாவினை ரூ.200/– ல் இருந்து ரூ.300/– ஆக உயர்த்திட இப்பொதுக்குழு ஏகமனதாக தீர்மானிக்கிறது.

13. காமதேனு நலநிதி திட்டத்தில் உள்ள நிதியின் வட்டி வருவாய் குறைந்து வருவதை கருத்தில் கொண்டு, காமதேனு நலநிதி திட்டத்தினை அடுத்த கட்டத்திற்கு உயர்த்தும் முகமாக காமதேனு நல நிதி திட்டம்(6) னை, சந்தா தொகையாக பத்தாயிரமும் பணப்பயனாக ரூ.3,50,000/– ஆகவும் நிர்ணயித்து அறிமுகப்படுத்திட இப்பொதுக்குழு ஒருமனதாக தீர்மானிக்கிறது.

14. இத்திட்டத்தில் முதல் 1000 நபர்கள் இணைந்தவுடன், பணப்பயன் ரூ.3,10,000/– வழங்குவது என்றும், 2000 நபர்கள் இணைந்தவுடன் பணப்பயன் ரூ.3,25,000/– வழங்குவது என்றும், 3000 நபர்கள் இணைந்தவுடன் முழுப் பலன் தொகையான ரூ.3,50,000/– வழங்குவது என இப்பொதுக்குழு ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

15. காமதேனு நலநிதி திட்டம் (4) இவ்வாண்டின் இறுதிவரை 31.12.2022 வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும் எனவும் 01.01.2023 முதல் இத்திட்டம் நடைமுறையில் இருக்காது என இப்பொதுக்குழு ஏகமனதாக தீர்மானிக்கிறது.

16. காமதேனு நலநிதி திட்டம் (5)ல் உறுப்பினர் சேர்க்கை 30.06.2023 வரை மட்டுமே இருக்கும் என இப்பொது குழு ஏகமானதாக தீர்மானிக்கிறது.

17. இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலை மற்றும் முதல் நிலை பதவி உயர்வில் தற்போது புகுத்தப்பட்டுள்ள பணி அனுபவ காலத்தை தளர்த்தி முன்பு இருந்தது போலவே இரண்டாம் நிலைக்கு இரண்டு ஆண்டுகள் அனுபவம் எனவும் முதல் நிலைக்கு எந்தவித காலவரம்பும் தேவையில்லை என்ற நிலையை கொண்டு வர வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

18. ஒரே பதவியில் 14 ஆண்டுகள் பணி முடித்துள்ள அனைத்து இளநிலை பொறியாளர்களுக்கும் உதவி செயற்பொறியாளர் சார்பு பதவி வழங்கிட இப்பொதுக்குழு வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

19. வேலை பளு ஒப்பந்தத்தில் உள்ளபடி தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு புதிய பணியிடங்களை உருவாக்கிட வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

20. சிவில் பிரிவில் உள்ள பணிகளின் நிலையினை கருத்தில் கொண்டும், பட்டயம் படித்து அதற்கு தகுதியான பணியிடங்களில் பணிபுரிய முடியாமல் பல்வேறு பணியிடங்களில் பணிபுரிந்து கொண்டிருக்கும் பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டும் சிவில் பிரிவுகளில் அனைத்து உப கோட்டங்களிலும் தொழிற்நுட்ப உதவியாளர் சிவில் பதவிகளை உருவாக்கிட வாரியத்தினை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

21. பிரிவு அலுவலகங்களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு காலியாக உள்ள பிரிவு பொறியாளர் பதவிகளை இளநிலை பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வின் மூலமும், உதவி பொறியாளர் உள்முக தேர்வின் மூலமும் நிரப்பிட வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

22. வாரியத்தின் நலன் கருதி தற்பொழுது காலியாக உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை உள்முகத் தேர்வு மூலம் உடனே நிரப்பிட வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

23. தற்பொழுது Redeployment செய்யப்பட்டுள்ள பதவிகளை மறுபரிசீலனை செய்து ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட இடத்திலேயே மீண்டும் அனுமதித்திட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

24. வாரிய பணியாளர்களின் நலனுக்கு எதிராகவும், வாரியத்தின் தன்னாட்சி அதிகாரத்திற்கு எதிராகவும் வெளியிடப்பட்ட வாரிய ஆணை எண் 2 ஐ உடனடியாக முழுவதுமாக ரத்து செய்திட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

25. தனியார் மயம் மின்சார சட்ட திருத்த மசோதா உள்ளிட்ட விஷயங்களுக்காக பொறியாளர் சங்கம் அங்கம் வகிக்கும் AIFOPDE எடுக்கும் முடிவுகளின்படி நடைபெற இருக்கும் அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொள்வது என இப்பொதுக்குழு ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

26. தமிழக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட பல துணை மின் நிலையங்களில் பணியிடங்கள் அனுமதிக்கப்படாமல் இருப்பதை

கலைந்து, முத்தரப்பு ஒப்பந்தத்தின்படி பணியிடங்களை உடன் உருவாக்கி நிரப்பிட மின்வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

27. பிரிவு அலுவலகங்களில் தற்பொழுது வளர்ந்து வரும் புதிய தொழிற்நுட்பங்களை கையாளவும், அனைத்து வகையான வேலைகளை கணினி வழியாகவே செய்ய வேண்டி இருப்பதன் அவசியத்தை கருத்தில் கொண்டும், பிரிவு பொறியாளரின் பணிச்சுமையை வெகுவாக குறைக்கும் முகமாக தற்பொழுது நகர்ப்புறம், அர்பன் பிரிவு அலுவலகங்களை போல் கிராம பிரிவு அலுவலகங்களுக்கும் ஒரு தொழிற்நுட்ப உதவியாளர் பதவிகளை உருவாக்கிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

28. தொழில் தகராறு தீர்ப்பாயம், உயர்நீதிமன்றம் ஆகியவை அளித்த தீர்ப்பினை மதிக்கும் முகமாக, உதவிப்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் முதல் நிலைக்கு உதவி பொறியாளர் என்ற பொதுப் பெயரை உடனே வழங்கிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

29. கொரோனா பெருந்தொற்று மற்றும் பேரிடர் காலங்களில் சிறப்பாக பணியாற்றி வரும் மின்வாரிய பணியாளர்களுக்கு மத்திய அரசு அளித்துள்ள பஞ்சப்படி உயர்வினை உடனே அளித்திட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

30. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கேங்மேன் பதவிகளை தற்போது உள்ள RWE பதவிகளில் இணைத்திடவும், இப்பதவிகளில் உள்ள சலுகைகளை கேங்மேன் பதவிகளுக்கும் அளித்திட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

31. மின்வாரியத்திற்கு சொந்தமாக உள்ள அனைத்து மின் உற்பத்தி நிலையங்களையும் தன் முழுமையான கொள்ளளவுக்கு தொடர்ந்து உற்பத்தி செய்ய அனுமதித்து தமிழ்நாட்டின் மின் தேவையை பூர்த்தி செய்யவும் வாரியத்தின் நஷ்டத்தினை குறைத்திடவும் வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

32. பிரிவு அலுவலங்களில் கணினி பணி தடைபடாதவாறு தொடர்ந்து பணி செய்திட தேவையான நெட்வொர்க் சிக்னல் ஸ்ட்ரென்த் அனைத்து அலுவலகங்களுக்கும் கிடைப்பதை உறுதி செய்யுமாறும், அனைத்து அலுவலகங்களிலும் ERP க்கு ஏற்றவாறான கணினிகளை உடனடியாக கொள்முதல் செய்து தருமாறும் வாரியத்தினை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

33. அவசரப் பணி தவிர்த்து சாதாரண பணிகளை செய்வதற்கு கூட விடுமுறை நாட்களில் வாரிய பணியாளர்களை கட்டாயப்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும் என்று வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

34. கிளை அளவிலும், மண்டல அளவிலும் நிர்வாகத்துடன் திட்டமிட்ட பேச்சுவார்த்தையினை நடத்திட கிளைகளையும் மண்டலங்களையும் இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

35. தளவாடப் பொருட்கள் பற்றாக்குறை வேலையாட்கள் பற்றாக்குறை ERP, RDSS ஆகியவற்றில் உள்ள நடைமுறை சிக்கல்கள், விநியோக பிரிவுகளில் உள்ள பிரச்சனைகள் குறித்து கிளை அளவில் மேற்பார்வை பொறியாளர் அவர்களிடம் எழுத்துப்பூர்வமான முறையீட்டினை தொடர்ந்து அளித்திட கிளைகளை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

36. மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழுவின் முடிவின்படி கிளை அளவிலும் கூட்டு நடவடிக்கை குழுவுடன் முழுவதுமாக இணைந்து செயல்பட கிளைகளை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

## OUR REPRESENTATION

To
THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,
TANGEDCO,
Chennai-600 002.

Lr.No.GS/TNEBES/F1/D 04 / 2022, Dt. 16.07.2022

Respected Sir,

Sub: One time relaxation to amendment to Service Regulations 94 and 98 of Tamilnadu Electricity Board Service Regulations for the recently called Technical Assistant to Junior Engineer / Electrical II grade promotion panel –requested regarding.

Ref: 1. (PER) FB TANGEDCO PROCEEDINGS NO. 18; Dated: 02.06.2020
2. Letter No. 6709/G3/G32/2022-2, Dated: 06.04.22
3. Lr.No.GS/TNEBES/F1/D.95 / 2020, Dt. 19.06.2020.
4. Lr.No.GS/TNEBES/F1/D.127/ 2020, Dt. 22.09.2020.
5. Lr.No.GS/TNEBES/F1/D.209 / 2021, Dt. 16.08.2021.
6. Lr.No.GS/TNEBES/F1/D.214 / 2021, Dt. 05.10.2021.
7. Lr.No.GS/TNEBES/F1/D 250 / 2022, Dt. 21.04.2022

*****

Amendment to Service Regulations 94 and 98 of Tamilnadu Electricity Board Service Regulations were issued vide reference - 1 cited, increasing the length of service eligible for promotions, breaking the six decade old practice.

Numerous representations had been made by our Sangam as cited in references for withdrawal of this amendment order which has been issued in haste. Respected Chairman cum Managing Director too had assured us of a positive settlement in this matter when it was brought up during the discussion with our Sangam on 07.10.2021.

Based on the huge vacancies in the posts of Junior Engineer / Electrical II grade and also considering its necessity suitability report has been called among 1077 Technical Assistants vide reference - 2 citedfor filling up of these posts. The panel is under process.

While most of the persons in the list have completed two years of service in the Board and would have been eligible for Junior Engineer / Electrical II grade promotion as per the earlier service regulation in force, are presently ineligible due to this amendment issued cited under reference – 1 which is worrying.

Relaxing this rule for just a panel will be of no harm and rather would be very much beneficial to the Board as the huge vacancies existing in the substations would be filled up thereby stabilizing the power network, generating stations and other areas of the Board.

Hence we pray the respected Chairman cum Managing Director to consider our genuine plea, do the needful for getting one time relaxation from the order cited under reference - 1 for the promotion panel called under reference – 2, thereby keeping up the assurance given to us,and thusrender justice please.

Thanking you, Sir,

Yours sincerely,

**(V.S.SAMPATH KUMAR)**

General Secretary.

---

To

THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,

TANGEDCO,

Chennai-600 002.

Lr.No.GS/TNEBES/F1/D.06/ 2022, Dt. 25.07.2022

Respected Sir,

Sub: Board's proceeding on withdrawal of Internal Selection affects the whole lot of categories – orders issued in haste – withdrawal of orders requested regarding.

Ref: (Per.) FB TANGEDCO Proceedings No.5; Dated the 7th July 2022

*****

TANGEDCO proceedings has been issued vide reference cited above plunging the life of many aspirant employees into total darkness. The reason and rationale behind this

order is not known to anyone.

The order states that internal selection shall be allowed to continue for employees who have acquired the higher qualification till 07.06.2022, as if Board has extended a new feature to its employees. But the actual condition is contrary to this as this order strangulates its own employees.

When the State Government is taking various steps and measures for improving the education status of its citizens and in turn their lives, it's perplexing how Board has given nod for executing such an order crushing its employees who are also among these concerned citizens irrespective of categories including our Diploma community.

Issuing of promotions through internal selection has been in force in the Board for more than five decades crossing various stages. Numerous Board orders have been passed on this subject all along this period. All these orders were not presented by the Board in a gold platter to its employees, but rather obtained by hard fight through umpteen representations, discussions, agitations and much more.

Sangam's members are one of the beneficiaries due to this existing policy of promoting Board Employees who have obtained higher qualification. Study permission to undergo higher studies in B.E. and A.M.I.E. courses and issuing of further promotion as Assistant Engineer for Diploma holders has been part and parcel of the system all along these five decades.

Sangam fought for this implementation for many years, even knocking the doors of the State Government five decades ago when their numerous representation went unheeded in the Board.

Then State Government looked into this matter studying various aspects including socio economic status and passed orders and instructions to the Board for approving it, acceding to our demand agreeing to the fact that, an existing employee with experience attaining higher qualification and subsequent promotion would be more beneficial to the organisation than the individual himself.

Above cited is just an example of a case pertaining to one category. Similar situation and condition applies for an S.S.L.C. holder to undergo I.T.I. course, Diploma Course (or) a +2 holder to undergo Bachelor's Degree in various subjects.

Hence this order cited under reference affects all categories including persons who are yet to join the Board but expecting appointment orders on compassionate grounds.

The situation after the orders cited under references is quite chaotic which couldn't be narrated in detail. Numerous orders and details pertaining to this matter is available with us which could be revealed and presented to the Board when situation warrants. Presently the situation could be diffused if Board holds a detailed discussion with us in this regard until withdrawal of orders.

Hence we pray the urgent intervention of the respected Chairman cum Managing Director in this matter requesting to do the needful for withdrawal of the orders cited under reference, until then hold a discussion as requested and thus render social justice please.

Thanking you, Sir,

Yours sincerely,

**(V.S.SAMPATH KUMAR)**

General Secretary.

Copy to:

The Chief Engineer / Personnel / TANGEDCO

## BOARD ORDERS

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

**ACCOUNTS BRANCH**

144, Anna salai,
Chennai

Circular Memo No.CFC/GL/FC/P/DFC/W/AO/W/D.27/PR.No.108/22 dated 27.07.2022

Sub: TANGEDO - Imprest and Temporary Advance - Certain instructions- Issued - Reg.

Ref: 1. Note approved by Director/Finance/TANGEDCO(27.07.2022)
2. U.O.No. CE/IT/SE/IT2/EE/ERP/D.664/2022 DATED 4.7.2022

*****

Chief Engineer/IT & RAPDRA vide U.O. dated 04.07.2022 have requested to issue certain instructions to field for simplifying the Imprest & Temporary Advance while processing it through ERP duly.

Accordingly, the issues prevailing at field are ascertained and following are furnished to optimize the use of ERP and to avoid delay in processing imprest and

Temporary Advance

1. The entries in PCB in regard to the expenditure charged in Imprest are not required while processing the expenditure in imprest through ERP as it captures the date such as value of expenditure, details of bills/invoice etc.

2. All the bills/invoices must be clearly scanned and attached in ERP portal before forwarding and is such case, pass order at the back of bills/invoices is not required.

3. The entries is regard to GST paid on the bills/invoices have to be duly entered with details of vendor Name, GSTIN, Bill No and date.

4. The original bills/invoices aginst which expenditure is charged in the imprest shall be directly handed over by the passing officer to the Central Office for recoupment, clearly stating the ERP document Number to which the bills/invoices relate. At the Central Office, the hard copies received are to be verified with the documents attached ERP before recoupment so as to avoid repetition in charging the same expenditure at later date.

5. The recoupment of Imprest can be made once 50% or more amount is spent.

6. At most care is to be taken to charge only the duly eligible expenditure in imprest amount.

7. At the end of the financial year, the imprest need no be closed and re-applied since the detailed report of the blance unspent amount in imprest could be ascertained in ERP.

8. The temporary advance need not be closed at the financial year end if the purpose for which it is opened is not completed. However, in others cases, the temporary advance has to be closed within 15 days after completion of the purpose for which it is opened.

(By order of Director/Finance/TANGEDCO)

Chief Financial Controller/General

---

செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று
உனது மனதை உயர்ந்த லட்சியங்களாலும் சிந்தனைகளாலும் நிரப்பு.
அவற்றை ஒவ்வொருநாளும் பகலிலும் இரவிலும்
உனது மனதில் நிறுத்து; அதிலிருந்து நற்செயல்கள் விளையும்.

– சுவாமி விவேகனந்தர்

## TANGEDCO

SECRETARIAT BRANCH
N.P.K.R.R. MAALIGAI,
144, ANNA SALAI,
CHENNAI - 2

**U.O.Note No.52295/A16/A161/2019-1, dated 16-08-2022**

Sub: TANGEDCO - Wage Revision Committee 2019- Constituted - Discussion with regard to Wage Revision / Work Load Settlement - Date and time - Intimated

Ref: (Per) CMD TANGEDCO Proceedings No.224 (SB) dated 07.12.2019

*****

In the reference cited, Wage Revision Committee is Constituted with the following Directors / Officers of the TANGEDCO, to negotiate with the Unions / Association for revision of Wages, Work allocation and staff pattern to be effective from 01.12.2019:-

i. Director (Finance) / TANGEDCO (Chairman of the Committee)
ii. Managing Director / TANTRANSCO.
iii. Director (Distribution)
iv. Director (Generation)
v. Secretary / TANGEDCO
vi. Chief Engineer / Personnel.
vii. Chief Financial Controller / General / TANGEDCO

2. In continuance of he above orders, the Director / Finance (Chairman of the Wage Revision Committee) has consented to hold discussion among the Members of the Wage Revision Committee on 20.08.2022 at 4.00 p.m. at 5th floor meeting hall of TANTRANSCO building, with regard to fixing convenient date for discussion with Unions / Associations in respect of Wage Revision and Work load Settlement with effect from 01.12.2019 and constitution of Sub-Committee for work load arears. All the Members of Wage Revision Committee may kindly make it convenient to attend the above discussion.

A.MANIKKANNAN
SECRETARY

## மனசே... ரிலாக்ஸ்...!

தொடர் –1

– முனைவர்.சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
தஞ்சை மண்டலச் செயலாளர்

மனசே சரியில்லை.....!

மனசுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கு.....!

மனசுக்கு புடிச்ச மாதிரி இல்ல.....!

இது போன்று பெரும்பாலும் பலரும் அடிக்கடி சொல்வதை பார்க்கிறோம், இது எல்லா துறைகளிலும் சமீபத்தில் சொல்லப்பட்டாலும், மின் வாரியத்தில் எல்லா மட்டத்திலும் தினமும் உச்சரிக்கும் வார்த்தைகள் ஆகிப் போனது. பிரச்சனைகளை எதிர்கொள்ள பயந்தால் இந்த வார்த்தைகள் தான் வெளிவரும், உண்மையில், நாம் மனசை ரிலாக்ஸாக வைத்துக் கொண்டால் எதுவும் சரியாக இருக்கும் என்பதே உண்மை.

சரி அந்த மனசு நம்மிடம் எங்கே இருக்கிறது? எனது பயிற்சியின் போது இந்த கேள்வியை கேட்டால் பலரும் பல பதில்களை கூறுவார்கள். பெரும்பாலும் அது மூளையில் இருப்பதாகவும், இதயத்தில் இருப்பதாகவும் சொல்வார்கள். ஆனால் அது முழு உண்மையல்ல, மூளை, இதயம், உட்பட நம் உடம்பில் உள்ள ஒவ்வொரு செல்களிலும் உள்ளது. இன்னும் தெளிவாக சொல்வதென்றால் மூளை (Brain) உள்ளிட்ட அனைத்து நம் உறுப்புகளும் மனித கம்ப்யூட்டரின் ஹார்ட்வேர் (Hardware) போன்றது எனில் மனசு (Mind) சாப்ட்வேர் (Software) போன்றது ஆகும்.

சாப்ட்வேர் என்கிற மனது சரியில்லை எனில் (வைரஸ்) அது உடம்பில் உள்ள எல்லா உறுப்புகளையும் செயலிழக்க செய்துவிடும். எனவே தான் மனதை ரிலாக்ஸ் ஆக வைத்துக்கொள்வது அவசியம்.

மனது ரிலாக்ஸாக இருக்கும் போது தான் அறிவு முழுமையாக வேலை செய்யும், மனது குழம்பி கிடந்தால் எந்த பிரச்சனைக்கும் தீர்வு கிடைக்காது, நியூட்டன் பரபரப்பாக ஆய்வகத்தில் இயக்கிய போது புவி ஈர்ப்பு விசையை கண்டுபிடிக்கவில்லை, ரிலாக்ஸாக கயிற்றுக் கட்டிலில் படுத்துக்கொண்டு இயற்கையை ரசித்த போது, ஆப்பிள் மரத்தில் இருந்து கீழே விழுந்தது, இந்த ஆப்பிள் ஏன் மேலே செல்லாமல் கீழே விழுகிறது? என்று யோசித்ததின் விளைவு புவி ஈர்ப்பு விசை கண்டறியப்பட்டது.

இதைப்போலவே எல்லா கண்டுபிடிப்புகளும் பெரும்பாலும் மனது ரிலாக்ஸ் ஆக இருக்கும் போதே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மனசை சந்தோசமாகவோ அல்லது சோகமாகவோ வைத்திருப்பது நம் கையில் தான் உள்ளது. எப்பொழுதும் நாம் நினைத்தால் நம் மனதை மகிழ்ச்சியாக வைத்து கொள்ளலாம். எல்லாம் இருந்தாலும் சிலரிடம் மகிழ்ச்சி இருக்காது, சிலரிடம் எதுவும் இல்லை என்றாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் மகிழ்ச்சியாக இருப்பர். முதல் வகை மனிதர்கள் எந்த ஒரு விஷயத்திலும் எளிதில் திருப்தி அடைய மாட்டார்கள். இத்தகைய மனோபாவம் கொண்டவர்கள் தேவையில்லாமல் சிறு சிறு விஷயங்களுக்குக் கூட கவலைப்படுவர். மன அழுத்தத்தை அதிகரித்து கொள்வர். அடுத்த வகையினர் எதை பற்றியும் கவலைப்படுவதில்லை. இருப்பதை வைத்துக் கொண்டு மகிழ்ச்சியாக இருப்பார்கள். இந்த மனோபாவம் உடையவர்களிடம் மகிழ்ச்சிக்குப் பஞ்சம் இருக்காது. நாம் எந்த வகை மனிதராக இருக்கிறோம்? மன அழுத்தம் எப்படி கூடுகிறது? அதனை கட்டுபடுத்தி மனதை ரிலாக்ஸாக வைத்துக் கொள்வது எப்படி? என்று தொடர்ந்து பேசுவோம்....... மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளலாம். எல்லாம் இருந்தாலும் சிலரிடம் மகிழ்ச்சி.....

தொடரும்.......

## <u>திருமண வரவேற்பு விழா அழைப்பிதழ்</u>

(லேட்) **P.அன்பழகன் (Ex Army) திருமதி.A.ராஜகுமாரி**
நந்தியன் குடிகாடு அரியலூர் மாவட்டம்,

ஆகியோரின் மகன் திருநிறைச்செல்வன். **Er.A.மணிவண்ணன்.**,JE/CC/TNEB Chennai., என்கிற மணமகனுக்கும்

**திரு.R.தவசீலன் – ரேவதி**
அகியோரின் மகள் திருநிறைச்செல்வி

**Er.D.திவ்யா B.E,**

ஆகியோரின் திருமணம் வரவேற்பு 10.09.2022 சனிக்கிழமை,
**SSM Elite Party Hall A/C**, 70 அடிசாலை, பெரவல்லூர்,
சென்னையில் நடைபெறவுள்ளது.
நேரில் அழைத்தாக கருதி அனைவரும்
விழாவிற்கு வருகை தந்து மணமக்களை வாழ்த்தி
அருளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்
**Er.A.மணிவண்ணன்.**
JE/CC/TNEB Chennai.

மின் அலை வளர்ச்சி நிதி ரூ.1000/– அளித்துள்ளார், நன்றி...

---

## <u>மணந்தனர் வாழ்த்துகிறோம்</u>

**Er.R.D.ரவி B.E.,(AEE / TNEB)**
**Vice President, TNEB Engg. Sangam, Selam Branch**
**செல்வி ரவி**
**Correspondent Saraswathi Matric School**
**உலிபுரம்**

ஆகியோரின் மகன் திருநிறைச்செல்வன். **D.R.தீபன் பாரத் B.E MBA.**, என்கிற மணமகனுக்கும்

திரு.இந்துகுரு ரமேஷ்குமார் - காஞ்சனா
அகியோரின் மகள் திருநிறைச்செல்வி

**I.ரிஷகா B.E,**

ஆகியோரின் திருமணம் வரவேற்பு 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை, கொங்கு திருமண மண்டபம், தம்மம்பட்டி, ஆத்தூரில் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்களை பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது
மின் அலை வளர்ச்சி நிதி ரூ.1000/– அளித்துள்ளார், நன்றி...

## பாராளுமன்றத்தில் மின்சார சட்டம் தாக்கல் செய்வதை கண்டித்து தமிழகம் முழுவதும் 08.08.2022 அன்று மின் வாரிய சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு பணி முடக்க போராட்டத்தில் நமது பொறியாளர் சங்கத்தினர் திரளாக கலந்து கொண்டனர்


Chennai HQ


Coimbatore


Chenglepet


Kanchipuram


Kallakurichi


Cuddalore


Tiruvannamalai


Tirupathur


Thanjavur


Tiruvarur


Nagai


Trichy


Pudukottai


Ramnad


Madurai


Kanyakumari



Karur



Mettur



Namakkal



Gobi



Pudukottai



Salem



Sivagangai



Tiruppur


MTPS


NCTPS


Nilgiris


Tirunelveli


Dindigul


Erode


மின் வாரிய தலைமையகத்தில் TNEBEF
அலுவலக திறப்பு விழாவில்
பொறியாளர் சங்க பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.


மின்வாரிய தலைமையகத்தில் தமிழ்நாடு மின்வாரிய
பண்டகசாலை பணியாளர்கள் சங்க அலுவலக திறப்பு விழாவில்
பொறியாளர் சங்க பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் – 2005

நம் இந்திய நாட்டில் இதுவரை இயற்றப்பட்டுள்ள சட்டங்கள் நிறைய இருப்பினும் தகவல் பெறும் உரிமைச் சட்டம்–2005 மிகவும் சிறப்பு வாய்ந்தது. இச்சட்டத்தின் மூலம் இந்திய குடிமகன் பொது அதிகாரி அமைப்புகளிலிருந்து தனக்கு வேண்டிய தகவல்களை உரிய வழிமுறையில் கோரிப்பெறலாம், இச்சட்டம் செயலாக்கத்திற்கு வந்து பதினெழு ஆண்டுகள் கழிந்த பின்னரும் பெரும்பான்மையான மக்களுக்கு இச்சட்டத்தின் முழு விவரம்அறியப்படவில்லை என்றே கூறலாம்.

இச்சட்டத்திற்கு சம்பந்தப்பட்ட பெரும்பாலான பொதுத் தகவல் அலுவலர்களும் இன்னமும் இச்சட்டத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ளவில்லை என்பது கசப்பான உண்மையாகும், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் நோக்கங்களாக

1. வெளிப்படைத்தன்மை (Transparency)
2. பொறுப்புமை (Accountability)
3. ஊழலை கட்டுப்படுத்துதல் (Control of Corruption) ஆகியவற்றை கூறலாம்.

இச்சட்டம் 12, அக்டோபர் 2005 முதல் இந்தியா முழுவதும் ( ஜம்மு, காஷ்மீர் நீங்கலாக) 31, அக்டோபர் 2019ம் ஆண்டு முதல் ஜம்மு, காஷ்மீர் உட்பட நாடுமுழுவதும் இச்சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. தகவல் என்றால் பதிவேடு, ஆவணம், அறிக்கை, குறிப்பாணை, சுற்றறிக்கை முதலான ஏதேனும் வடிவில் அரசு அலுவலங்களில் இருக்கும் பொருள். எளிமையாக சொன்னால் தகவல் என்பது அரசு அலுவலகத்தில் இருக்கும் விவரம் அடங்கிய தாள் அல்லது அதில் அடங்கியிருக்கும் விவரம் ஆகும்.

### தகவல் பெறும் உரிமைச்சட்டம்–2005 ஒரு கண்ணோட்டம்

- அனைத்து இந்திய குடிமக்களுக்கும் தகவலைக் கேட்டுப்பெறும் உரிமை உண்டு.
- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தகவலை மட்டுமே கேட்டுப் பெற முடியும்.
- கோரிக்கைகள் மற்றும் புகார்களை தீர்த்து வைக்க இச்சட்டத்தில் வழிவகை இல்லை.
- பொதுத் தகவல் அலுவலர் தன்னுடைய சொந்த எண்ணங்களையோ, கருத்துக்களையோ அல்லது ஞாபகத்தில் உள்ளவற்றையோ தெரிவிக்க கூடாது.
- குடிமக்களுக்கு துறை சம்பந்தமாக பணிகளை ஆய்வு செய்ய உரிமை உண்டு. பதிவேடுகளையும் கோப்புகளையும் ஆய்வு செய்யும் உரிமையுண்டு.
- ஆய்வின் போது குறிப்பு எடுத்துக்கொள்ளவும், தேவைப்படின் நகல்கள் எடுத்துக்கொள்ளவும் எடுக்கப்பட்ட நகல்களை சான்றிதழ் இட்டு தரக்கோரவும் குடிமக்களுக்கு உரிமை உண்டு.
- கணினியில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள விவரங்களைக் கேட்டுப் பெறவும் குடிமக்களுக்கு உரிமை உண்டு.
- பணிகள் நடைபெறும் பொழுதோ அல்லது நடைபெற்று முடிந்த பின்னரோ மாதிரிப் பொருட்களைக் கேட்டு வாங்க குடிமக்களுக்கு உரிமை உண்டு. பொதுத்தகவல் அலுவலர் சான்றிதழ் இட்டு மாதிரிப் பொருட்களைத் தர வேண்டும்.
- அனைத்து அலுவலர்களும் தானாகவே முன் வந்து குடிமக்கள் கேட்கின்ற தகவல்களைத் தருகிற பரந்த மனப்பாங்கு உடையவர்களாக இருக்க வேண்டும்.
- பணிப்பதிவேடு, அரசு ஊர்திகளின் (ஜீப், மகிழ்வுந்து) லாக்புக் ஆகியவற்றில் உள்ள விவரங்கள்

தகவல்களாக கருதப்படும்.

- பொதுத்தகவல் அலுவலர் கோப்பில் உள்ள குறிப்புக் கோப்பு (Note File) விவரங்களைக் குடிமக்கள் கேட்டால் அதன் நகலை தரவேண்டும்.
- உதவி பொதுத்தகவல் அலுவலர், தகவல்களை நேரடியாக மனுதாரருக்கு வழங்ககூடாது.
- உதவி பொதுத்தகவல் அலுவலர் மூலமாக மனு பெறப்பட்டு இருப்பின் 35 நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவல் அளிக்க வேண்டும்.
- பொதுத்தகவல் அலுவலர் நேரடியாக தனது அலுவலகத்தில் மனுவினைப் பெற்றால் 30 நாட்களுக்குள் மனுதாரருக்கு உரிய பதில் அளிக்க வேண்டும்.
- தன்னுடைய கடமையினை நிறைவேற்ற பொதுத்தகவல் அலுவலர் எந்த ஒரு அலுவலரது உதவியையும் நாடலாம்.
- பொதுத்தகவல் அலுவலர் தன்னுடைய கடமையினை நிறைவேற்ற பிற அலுவலர்களுடைய உதவியை நாடும் பொழுது, அதில் ஏதேனும் ஒரு சில அலுவலர்கள் இச்சட்டத்திற்கு புறம்பாக நடந்து கொண்டால், அதாவது பொதுத்தகவல் அலுவலர் தகவல் கேட்டு குறிப்பிட்ட கால கெடுவுக்குள் தகவல் வழங்கவில்லை எனில், அவர்கள் அனைவரும் இச்சட்டத்தின் கீழ் பொதுத் தகவல் அலுவலர்களாகக் கருதப்படுவார்கள்.
- பொதுத்தகவல் அலுவலருக்கு உரிய கால கெடுவுக்குள் தகவல் தாராத அலுவலர்கள் தண்டனைப் பிரிவுக்கு ஈர்க்கப்படுவார்கள்.
- இச்சட்டத்தின் கீழ் கோரப்படும் தகவல் குறித்த விண்ணப்பம் எழுத்து வடிவில் இருக்க வேண்டும்.
- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்களை தபால் மூலமாகவோ, நேரடிடையாகவோ அல்லது மின் அஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.
- விண்ணப்பங்களை அதற்குரிய கட்டணத் தொகையுடன் அனுப்ப வேண்டும்.
- தமிழக அரசு ஆணையின்படி, விண்ணப்பக் கட்டணத் தொகையினை ரொக்கமாகவோ, வங்கி காசோலை, கருவூல சலான் மற்றும் கோர்ட் பீஸ் ஸ்டாம்பு மூலமாகவோ அல்லது மணியாடர் மூலமாகவோ செலுத்தலாம்.
- விண்ணப்பதாரர் தனது மனுவில் எந்த காரணத்திற்காக தகவல் வேண்டும் என்கிற காரணத்தை தெரிவிக்க வேண்டியதில்லை.
- விண்ணப்பதாரர் தனது மனுவில் தன்னுடைய விவரங்களைத் (Personal Details) தர வேண்டிய அவசியமில்லை. ஆனால் கண்டிப்பாக தன்னுடைய விலாசத்தை குறிப்பிட வேண்டும்.
- மனுதாரர் எழுத்தறிவு அற்றவராகவோ அல்லது விண்ணப்பத்தினை எழுத முடியாத சூழ்நிலையில் உள்ளவராகவோ இருப்பின் பொதுத்தகவல் அலுவலர் அவருக்கு தேவையான எல்லா நியாயமான உதவிகளையும் செய்ய வேண்டும்.
- வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் விண்ணப்பக் கட்டணத்தை தொகை செலுத்த வேண்டியதில்லை. அதே போன்று தகவல்களை இலவசமாகப் பெறலாம். ஆனால் இது குறித்த

அத்தாட்சியை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

- பொதுத்தகவல் அலுவலர் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் (சாதாரணமாக 30 நாட்கள்) தகவல்களை வழங்காவிட்டால் மனுதாரருக்கு இலவசமாக தகவல்களை வழங்க வேண்டும்.
- மனுதாரர் கோரும் தகவல்கள் உயில் / வாழ்க்கை / சுதந்திரம் பற்றியதாக இருப்பின் பொதுத்தகவல் அலுவலர் 48 மணி நேரத்திற்குள் உரிய பதில் அளிக்க வேண்டும்.
- மூன்றாம் நபர் சம்பந்தமான விவரங்களை மனுதாரர் கோரியிருந்தால் அது சம்பந்தமாக பொதுத் தகவல் அலுவலர் முடிவு எடுக்கும் முன்னர் மூன்றாம் நபர் சமர்ப்பித்துள்ள கடிதம் ஏதேனும் இருப்பின் அதனை பரிசீலித்த பின்னரே முடிவு எடுக்க வேண்டும்.
- பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்களை இச்சட்டத்தின் பிரிவு 8 மற்றும் 9–ன் கீழ் வழங்க இயலாத நிலை ஏற்படின் மனுதாரருக்கு உரிய விளக்கத்துடனும், அதுசம்பந்தமான சட்டப் பிரிவுடனும் தெரிவிக்க வேண்டும். தாங்கள் கோரும் தகவல்கள் வழங்க இயலாது என ஒரு வரியில் தெரிவிக்க கூடாது.
- கனிசமாக அரசின் நிதி உதவி பெறுகின்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமிருந்தும் தகவல்களை கேட்டுப் பெறலாம்.
- உயர் நீதி மன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றத்திடம் இருந்தும் தகவல்களை இச்சட்டத்தின் மூலம் பெறலாம்.
- பாரதப் பிரதமர் அலுவலகத்தில் உள்ள தகவல்களையும் இச்சட்டத்தின் மூலம் பெறலாம்.
- பொதுத் தகவல் அலுவலர் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் தனது முடிவினைத் தெரிவிக்கத் தவறினால் அத்தகவலை தர மறுத்ததாகக் கருத்தப்படும்.
- அரசு அலுவலர்களும் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் தேவைப்படும் தகவல்களைப் பெறலாம்.
- அனைத்து பொது அதிகார அமைப்புகளும் பதிவேடு மேலாண்மையில் தனி கவனம் செலுத்தி, குடிமக்கள் கேட்கும் தகவல்களை உடனுக்குடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் நேரடியாக மனு தரும் போது அவருக்கு உடனடியாக பொதுத்தகவல் அலுவலர் ஒப்புகை வழங்க வேண்டும்.

மனுதாரர் கோருகின்ற தகவல்கள் வேறு துறை சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் அதனைப் பெற்றுக்கொண்டு, மனுதாரருக்கு ஒப்புகை வழங்கிவிட்டு, 5 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட துறை / நிறுவனத்தின் பொதுத்தகவல் அலுவலருக்கு அதனை அனுப்பி வைக்க வேண்டும்.

<u>முதனிலை (Preliminary)</u>

<u>1. சுருக்கத் தலைப்பு, நீட்சி மற்றும் அமலாக்கம்:–</u> இச்சட்டம் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 என்று அழைக்கப்படுகிறது.

2. இச்சட்டம் இந்தியா முழுமைக்கும் பொருந்தும்

3. பிரிவு 4 இன் உட்பிரிவு (1) பிரிவு 5 இன் உட்பிரிவுகள் (1) மற்றும் (2) மற்றும் பிரிவுகள் 12, 13, 15, 16, 24, 27 மற்றும் 28 ஆகிய பிரிவுகளின் வகைமுறைகள் உடனடியாக அமலுக்கு வருகின்றன. மற்ற ஏனைய பிரிவுகளுடன் இச்சட்டம் இயற்றப்பட்ட நாளிலிருந்து அதாவது குடியரசு தலைவர் ஏற்பளித்த

15.06.2005 இருந்து 120 நாட்கள் கழித்து 12.10.2005 இருந்து அமலுக்கு வருகின்றன.

**இப்பிரிவின் பொருள் விளக்கம் :–** இப்பிரிவின் படி பிரிவு 4 (1) (பொது அதிகார அமைப்பின் கட்டுப்பாடு) ; பிரிவு 5(1) மற்றும் (2) பொதுத்தகவல் அலுவலர் மற்றும் உதவிப் பொதுத் தகவல் அலுவலர் நியமனம்) ; பிரிவு 12 (மத்தியத்தகவல் மையம் அமைத்தல்) பிரிவு 13 (மத்திய தகவல் ஆணைய ஆணையரின் பதவிக்காலம், பணி நிபந்தனைகள்) பிரிவு 15 (மாநில தகவல் ஆணையம் அமைத்தல்) ; பிரிவு 16 ( மாநில தகவல் ஆணையரின் பதவிக்காலம், பணி நிபந்தனைகள்) ; பிரிவு 24 ( சில துறைகளுக்கு இச்சட்டத்திலிருந்து விலக்களிப்பு) பிரிவு 27 (உரிய அரசின் விதிகள் உண்டாக்கும் அதிகாரம்) ; மற்றும் பிரிவு 28 (தகுதி வாய்ந்த அதிகாரி அமைப்பின் விதிகள் உண்டாக்கும் அதிகாரம்) ஆகியவை ( இச்சட்டம் இந்திய குடியரசுத் தலைவர் ஏற்பளித்த 15.06.2005 முதல் உடனடியாக அமலுக்கு வருகின்றது. மற்ற ஏனைய பிரிவுகள் 15.06.2005 இருந்து 120 நாட்கள் கழித்து 12.10.2005 முதல் அமலுக்கு வருகின்றது.) 2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ம் நான் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா அவர்கள் இந்திய பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பின் படி இந்திய அரசியலமைப்பு சட்ட சரத்துக்கள் 370 மற்றும் 35 நீக்கப்பட்டு ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் லடாக் மற்றும் காஷ்மீர் என்று இந்திய மத்திய அரசின் எல்லைக்குட்பட்ட இரு பகுதிகளாக இணைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம் 2019 (மத்திய சட்டம் 30, 2019) வழியாக 31.10.2019 முதல் இத்தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலங்களுக்கும் பொருந்தும்.

**தகவல் பெறும் உரிமை மற்றும் பொது அதிகார அமைப்புகளின் கட்டுப்பாடு**

**தகவல் பெறும் உரிமை :** இச்சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டவைகளுக்குட்பட்டு எல்லாக் குடிமக்களும் தகவல் பெறும் உரிமை பெறுவார்கள்.

**இப்பிரிவின் பொருள் விளக்கம் :** இச்சட்டத்தில் **"குடிமகன்"** என்ற சொல்லுக்கு பொருள் விளக்கம் அளிக்கப்படவில்லை. எனவே இச்சட்டத்தின் படி எல்லாக் குடிமகனும் எந்த ஜாதி, மத, இன வேறுபாடின்றி தகவல் பெறலாம். இந்தியாவில் வாழும் இந்தியக் குடிமகனில்லாத அயல் நாட்டினர் இச்சட்டத்தின் மூலம் தகவல் பெறமுடியாது. ஆனால், வெளி நாட்டில் வாழும் ஒரு இந்தியக் குடிமகன் அந்நாட்டில் உள்ள இந்தியத் தூதரகத்தின் மூலம் இச்சட்டத்தின் வாயிலாக, இந்திய நாட்டுத் தகவலைப் பெறலாம் மேலும், பதிவு செய்யப்பட்ட ஒரு கழகம் அல்லது இயக்கம் அல்லது சங்கத்தின் உறுப்பினர் என்ற முறையில் தன் பெயரிட்டு சரியான விலாசமிட்டு இச்சட்டத்தின் மூலம் தகவல் பெறலாம்.

**மத்திய தகவல் ஆணையம்:**

**மத்திய தகவல் ஆணையத்தின் கட்டமைப்பு:** மத்திய அரசு இச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடமையைச் செய்ய மத்தியத் தகவல் ஆணையம் என்ற அமைப்பை ஏற்படுத்தி அரசுப் பதிவிதழில் அறிவிக்கை செய்யும்.

மத்திய தகவல் ஆணையம் கீழ்காணும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்.

i) தலைமை தகவல் ஆணையர் மற்றும்

ii) தேவைக்கேற்ப பத்துக்கு மிகாமல் மத்தியத் தகவல் ஆணையர்கள் இருப்பர்.

கீழ்காணும் உறுப்பினர்கள் அடங்கிய குழுவில் பரிந்துரையின் அடிப்படையில் குடியரசுத் தலைவரால் தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

i) பிரதம மந்திரி – குழுத்தலைவர்

ii) மக்களவையின் எதிர்தரப்பு கட்சித்தலைவர் மற்றும்

iii) பிரதம மந்திரியால் நியமிக்கப்படும் ஒரு மத்திய அமைச்சர்

தலைமைத் தகவல் ஆணையரும், இதரத் தகவல் ஆணையர்களும் பொதுவாழ்கையில் சிறந்தவர்களாகவும், அரசு ஆளுமை, நிர்வாகம், மக்கள், செய்தி, ஊடகம், பத்திரிக்கை, பொதுச்சேவை, மேலாண்மை, தொழில் நுட்பம், அறிவியல் மற்றும் சட்டம் ஆகியவற்றில் மிகுந்த அறிவுத்திறனும், பட்டறிவும் கொண்டவர்களாக இருப்பர்.

<u>மாநிலத் தகவல் ஆணையம்</u>

<u>மாநிலத் தகவல் ஆணையத்தின் கட்டமைப்பு:</u> ஒவ்வொரு மாநில அரசும் இச்சட்டத்தின் கீழ் அம்மாநிலத்தின் பெயர் கொண்ட மாநிலத் தகவல் ஆணையம் என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அலுவல்களை கவனிக்கும் பொருட்டு அரசுப் பதிவிதழில் அறிவிக்கை வெளியிட வேண்டும்.

மாநில தகவல் ஆணையம் கீழ்காணும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்

i) மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் மற்றும்

ii) தேவைக்கேற்ப பத்துக்கு மிகாமல் மாநிலத் தகவல் ஆணையர்கள் இருப்பர்

கீழ்காணும் உறுப்பினர்கள் அடங்கிய குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஆளுநரால் தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் தகவல் ஆணையர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

i) மாநில முதலமைச்சர் – குழுத்தலைவர்

ii) சட்டப் பேரவையின் எதிர்தரப்பு கட்சித்தலைவர் மற்றும்

iii) முதலமைச்சரால் நியமிக்கப்படும் ஒரு அமைச்சர்.

<u>தகவல் ஆணையங்களின் அதிகாரம், அலுவல்கள், மேல்முறையீடு மற்றும் தண்டனைகள்:</u>

இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளவைகளுக்கு உட்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த ஒரு நபரிடமிருந்து பெறப்படும் குற்றச்சாட்டை விசாரணை செய்ய வேண்டியது மத்திய அல்லது மாநில ஆணையங்களின் கடமையாகும்.

i) இச்சட்டதின் கீழ் மத்திய அல்லது மாநில பொதுத்தகவல் அலுவலர்கள் நியமிக்கப்படாததால் தகவல் கோரி விண்ணப்பிக்க இயலாத நிலைமை அல்லது மத்திய அல்லது மாநிலப் பொது உதவித் தகவல் அலுவலர்கள் தகவல் கோரும் விண்ணப்பத்தை அல்லது மேல் முறையீட்டை வாங்க மறுத்தாலோ அல்லது இச்சட்டத்தின் பிரிவு 19 உட்பிரிவு (1) இன் கீழ் மேல் முறையீட்டாளருக்கோ அல்லது மத்திப்பொதுத் தகவல் அலுவலருக்கோ அல்லது மாநிலப் பொதுத் தகவல் அலுவலருக்கோ அல்லது மத்தியத் தகவல் ஆணையத்திற்கோ அல்லது மாநிலத் தகவல் ஆணையத்திற்கோ அனுப்ப மறுக்கும் பொழுது

ii) இச்சட்டதின் கீழ் கோரப்பட்ட தகவல் மறுக்கப்பட்ட நிலையில்

iii) தகவல் கோரிய விண்ணப்பத்திற்கு இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள காலக் கெடுவிற்குள் தகவல் அளிக்க மறுத்தும் அல்லது எந்த பதிலும் அளிக்கப் படாத நிலையில்

iv) தனக்கு வழங்கப்பட்டத் தகவல்கள் முழுமையானதல்ல. தவறான அல்லது பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டன என்று ஒருவர் கருதும் நிலையில் மத்தியத் தகவல் ஆணையமோ அல்லது மாநிலத் தகவல் ஆணையமோ குற்றச் சாட்டிற்கான காரணம் நியாயமானது என்று மன

நிறைவு கொள்ளும் பொழுது விசாரணைக்கு உத்திரவிடலாம்,

இச்சட்டம் சில நிறுவனங்களுக்குப் பொருந்தாது:

<u>மத்திய அரசினால் நிருவப்பட்ட புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் :</u>

1)உளவுத்துறைக்குழு, 2)செயலக அமைச்சரவையின் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு, 3)வருவாய் புலனாய்வு இயக்கம், 4)மத்திய பொருளாதாரப் புலனாய்வுக் குழுமம், 5)செயலாக்க இயக்கம், 6)போதை பொருள் கட்டுப்பாட்டுக்குழு, 7)வானூர்தி ஆராய்ச்சி மையம், 8)சிறப்புப் பாதுகாப்புப் படை, 9)எல்லையோரப் பாதுகாப்புப் படை, 10)மத்திய பாதுகாப்புப் காவல் படை 11)இந்திய–திபேத்திய எல்லையோரக் காவல், 12)மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப்படை, 13)தேசிய பாதுகாப்புப் படை, 14)அஸ்ஸாம் துப்பாக்கிப் படை, 15)சாஸ்த்ர சீம பால், (28.09.2005 இல் முதல் திருத்தத்தில் சேர்க்கப்பட்டது) 16)வருமானவரி ஆணையம், (புலனாய்வு) (27.03.2008 இல் இரண்டாம் திருத்தம்), 17)தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சிக்குழுமம், (27.03.2008 இல் இரண்டாம் திருத்தம்) 18) இந்திய நிதிப் புலனாய்வுப்பிரிவு, 19)சிறப்புப் பாதுகாப்பு குழு (28.09.2005 இல் முதல் திருத்தத்தில் சேர்க்கப்பட்டது), 20) பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்குழு (28.09.2005 திருத்தத்தில்), 21) எல்லையோர சாலை மேம்பாட்டு நிறுவனம் (28.09.2005 திருத்தத்தில்), 22)தேசிய செயலகப் பாதுகாப்புக்குழு (08.10.2008 இல் மூன்றாம் திருத்தம்), 23)மத்திய புலனாய்வு அமைப்பு (09.06.2011 திருத்தம்), 24) மத்திய புலானாய்வு துறை (09.06.2011 திருத்தம்), 25)தேசிய உளவுக் கட்டமைப்பு (09.06.2011 திருத்தம்)

தமிழ் மாநில அரசு 14.10.2005 தேதியிட்ட பொதுத்துறை நிலை ஆணை எண்கள் 1042–1045 வாயிலாக, தகவல் பெறும் உரிமை சட்டத்தின் தமிழ்நாட்டில் கீழ்காணும் நிறுவனங்களுக்கு மக்கள் தகவல் பெற அணுகுவதிலிருந்து விலக்களித்துள்ளது.

1) தனிப்பிரிவு–குற்றப் புலானாய்வு துறை சி.ஐ.டி, 2) கியூ பிரிவு – குற்றப்புலனாய்வுத்துறை சி.ஐ.டி, 3) தனிப்பிரிவு, 4) பாதுகாப்புப் பிரிவு, 5) கோர் செல் சி.ஐ.டி, 6)சுருக்கெழுத்து அமைப்பு, 7) மாவட்டத்தனிப் பிரிவுகள், 8) காவல்துறை ஆணையர்–புலனாய்வுப்பிரிவு, 9)தனிப் புலனாய்வு செல்கள், 10) மாவட்டங்களிலுள்ள ஆணையரங்கள், 11) நக்சலைட்டு தனிப்பிரிவு, 12)குற்றப் பிரிவு சி.ஐ.டி, 13) தனிப்புலனாய்வு குழு, 14) திரைப்படத் திருட்டு செல், 15) போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவு அமைப்பு, 16)கொள்ளைக்கெதிர் செல், 17)பொருளாதாரக் குற்றச் செயல்கள் சரகம் I & II, 18)சிலை திருட்டுத் தடுப்புச் சரகம், 19) சிசிஐ டபிள்யு குற்றப் புலனாய்வுத்துறை, 20)குடிமைப் பொருள் வழங்கல்/குற்றப் புலனாய்வுத்துறை, 21) கணினிக் குற்றச்செல், 22) மாவட்ட குற்றம், மாநகரக் குற்றப் பிரிவுகள், 23)சிறப்புப் பணிப்படை, 24) பயிற்சிபடை மற்றும் பள்ளி, 25) கடலோரக் காவல் படை, 26) விரல் ரேகைப் பிரிவு, 27) காவல்துறை வானொலிப்பிரிவு, 28) உள் காவல், VII) துறை, 29) உள் (கடுமந்தனம்) துறை, 30) பொது (கடுமந்தனம்) துறை, 31) தமிழ்நாடு மாநில விழிப்புணர்வு ஆணையம், 32) விழிப்புணர்வு மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்குநர்

(அரசு நிலை ஆணை எண் 158, ப ம GY (எண்) துறை நாள் 26.08.2018 ஆகிய அமைப்புகளில் இருந்து தகவல் உரிமை சட்டத்தின் கீழ் தகவல்களை பெற விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சட்டத்தைப் படித்தோர் மற்றும் படிக்காதோர் கையாளுவதால் ஒரு பொது அதிகார அமைப்பில் யார் யார் அலுவலர், அவர் என்ன பொருள் கவனிக்கிறார் என்று துல்லியமாக அறிந்து, சரியான அலுவலருக்கே விண்ணபிக்க முடியாத நிலையில், சம்பந்தமில்லாத ஒரு அலுவலரிடம் விண்ணப்பிக்க வாய்ப்புண்டு, இப்படிப்பட்ட சூழலில் அவ்விண்ணப்பங்களை எப்படிக் கையாள வேண்டும் என்று மத்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித்துறை தனது அலுவலகத் குறிப்பாணை எண் : 10/2/2008/ த.உ/ நாள் 06.02.2008 இல் கீழ்காணும் தெளிவுரை வழங்கியுள்ளது.

ஒரு விண்ணப்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தகவல்கள் கேட்டு அவை வெவ்வேறு இரண்டு பொது அதிகார அமைப்பு சம்பந்தப்பட்டவை எனில் அந்த விண்ணபத்தை முதலில் பெறுகின்ற பொது அதிகார அமைப்பில் பணியாற்றும் பொதுத் தகவல் அலுவலர் தன் சம்பந்தப்பட்டப் பகுதியை தகவல் அளிக்கும் வண்ணம் நகல் எடுத்துக் கொண்டு மற்றொரு தகவல் சம்பந்தப்பட்டப் பகுதியை சம்பந்தப்பட்ட பொது அதிகார அமைப்புக்கு விண்ணப்பம் பெற்ற 5 நாட்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். இதனை விண்ணப்பதாரருக்கும், தெரிவிக்க வேண்டும். அதுவே ஒன்றுக்கும் மேற்பட்ட பொது அதிகார அமைப்புகளுக்கு புதிதாக விண்ணப்பிக்குமாறு விண்ணப்பதாரருக்குத் திருப்பி அனுப்பி விடலாம். அதே போல் மத்திய அரசின் பொது அதிகார அமைப்பிற்கு புதிதாக விண்ணப்பிக்க கோரி, விண்ணப்பதாரருக்கே திருப்பி அனுப்பலாம். ஒரே பொது அதிகார அமைப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட பொதுத்தகவல் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள நிலையில் ஒரு பொதுத்தகவல் அலவலரிடம் பெறப்பட்ட விண்ணப்பம், ஒன்றுக்கும் மேற்பட்ட பொதுத்தகவல் அலுவலர்களைச் சார்ந்திருப்பின் அதனை வேண்டிய நகல்கள் எடுத்து, அன்றை தினமே சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

பொர். **R. சந்தோஷ் குமார்,** ME, MCA, MBA.
வெளியீட்டு செயலாளர் / மின்அலை

---

**கேள்வி-பதில்**

ஒரு விமானம் அவ்வளவு பெரிய எடையுடன் மேலெழும்பி பறக்க முடிகிறது?

பொதுவாகப் பயணிகளுக்கான விமானங்கள் இரண்டு வகைப்படும் முதல் வகை ஃபிக்ஸ்ட்விங், (Fixed wing) அடுத்த வகை ரோட்டரிவிங் (Rotary wing) என்பது விமானங்களைப் பறக்க வைப்பதற்காக மேல் நோக்கி உயர்த்தப்படும் விசையை அடிப்படையாகக் கொண்டது பிக்ஸட் விங் விமானம் இறக்கைகளைப் பயன்படுத்தி காற்றின் வேகத்தில் சென்று பறக்கிறது அதேபோல் ரோட்டரி விங் விமானங்களும் இறக்கைகளால் தான் பறக்கின்றன ஆனால் அந்த இறக்கைகள் ரோட்டரி பிளேடு (Rotary Blades) எனப்படுகின்றன,

இதில் முதல் வகையான ஃபிக்ஸ்ட் விங்ஸ் விமானத்தைப் பறக்கவைக்கப் பயன்படுகின்றன, முதலாவது பாகம் இறக்கை (wing) இரண்டாவது பாகம் இயந்திரம் (Engine) மூன்றாவது பாகம் வால் இறக்கைகள் (Tail wing) இந்த மூன்றில் என்ஜின் வேலை விமானத்தை முன்னோக்கி தள்ளுவது அதற்காக என்ஜினில் உள்ள இயந்திரங்கள், தங்களுக்கு முன்னால் உள்ள காற்றை உள்ளே இழுத்து மிக வேகமாகப் பொறியியல் முறை மூலம் தள்ளுவதால் என்ஜினும் அதனோடு இணைக்கப்பட்டுள்ள விமானமும் முன்னே இழுக்கப்படுகின்றன,

இதெல்லாம் நிகழ்ந்து விமானம் மேலே கிளம்பி வானத்தில் ஒரு பறவையைப் போல பறக்க அதற்கு நான்கு விதமான விசைகள் தேவை 1) விண்ணில் பறக்கும் விமானத்தை மேல் நோக்கி இழுப்பதற்கான இழு விசை (Left), 2) விமானத்தை முன்னோக்கித் தள்ளும் உந்து விசை (Thrust), 3) விமானத்தை கீழ் நோக்கித் இழுக்கும் எடை அதாவது வெயிட் (Weight), 4) விமானத்தை பின்னோக்கி இழுக்கும் ட்ராக் (Drag) ஆகியவை விமானம் உயரத்தில் எந்த விதமான பிரச்சனையும் இல்லாமல் பறக்க மேற்கண்ட நான்கு விசைகளும் சமமாக இருக்க வேண்டும்

எந்த விமானமாக இருந்தாலும் சரி அதனுடைய குறைந்தபட்ச வேகம் மணிக்கு 500 கி,மீட்டர் இந்த வேகத்தில்தான் அது பறந்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் ஏனென்றால்

அப்போதுதான் அதன் இறக்கைகளில், மேலே எழும் சக்தி தொடர்ச்சியாகக் கிடைத்து விமானத்தின் எடை சமன் செய்யப்படும் அந்த வேகத்தில் இருந்து குறைந்தால் விமானம் கீழே இறங்க ஆரம்பித்துவிடும்

**2. வைட்டமின் - D சத்து கிடைக்க வேண்டுமென்றால் வெயிலில் நிற்க வேண்டும் என்று சொல்கிறார்கள் வெயிலில் நிற்பதற்கு எந்த நேரம் ஏற்றது எவ்வளவு நிமிடங்கள் நிற்க வேண்டும்?**

ஒரு மனிதனின் எலும்பு மண்டலம் உறுதியாய் இருக்க வேண்டுமென்றால் வைட்டமின் - D அவசியம் இந்த வைட்டமின் - D சூரியன் உதித்த இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு அந்த ஒளியில் உற்பத்தியாகிறது. சூரிய ஒளி உடம்பின் மீது பட்டதுமே, தோலில் உள்ள ஏர் ஸ்டீரோல்ஸ் எனப்படும். ஒரு ரசாயனப் பொருள் சூரியனுக்கும் நமக்கும் இடையே தூதுவனாகச் செயல்பட்டு, சூரிய ஒளியில் இருக்கும் வைட்டமின் - D உடலுக்குத் தேவையான அளவு மட்டும்தான் இருக்க வேண்டும் பொதுவாக காலை 8 மணி வெயிலில் சுமார் 15 நிமிடம் நிற்பது நல்லது. உடம்பு தாங்ககூடிய அளவுக்கு வெயிலில் நிற்க வேண்டும் நாம் சாப்பிடும் உணவின் மூலமாக வைட்டமின் - D கிடைக்க நம் முன்னோர்கள் செய்த ஏற்பாடுகளில் ஒன்று தான் மொட்டை மாடியில் வற்றல், வடாம் உலர்த்துவது. லேசாக கெட ஆரம்பித்த ஊறுகாய் மற்றும் தானிய வகைகளை இரண்டு மணிநேர மத்தியான வெயிலில் வைத்தால் வைட்டமின் - D அதை கூத்திகரிப்பு செய்து அந்த பொருள்கள் கெடாமல் பாதுகாக்கும்.

---

## ஒழுங்கு நடவடிக்கை (Disciplinary proceedings)

ஒழுங்கு நடவடிக்கை என்றால் ஒரு பணியாளர் அல்லது அலுவலர் பணியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டது தெறிய வரும் பொழுது அவர் மீது துறைரீதியாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைப் பெயர் ஒழுங்கு நடவடிக்கை ( Disciplinary proceedings ) எனப்படும்.

ஒழுங்கீனமாக நடந்து கொள்ளும் வாரியப் பணியாளர்களின் மேல் மேற்கொள்ளப்படும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்காக வாரியத்தால் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. மாநிலப் பணியாளர் ( Provincial Staff ) பணியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டது தெரியவந்தால் அவர் மீது தமிழ்நாடு மின் வாரிய எழுத்தர் துறை பணியாளர்களுக்கான நிலையாணைகளின் (Standing orders) படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

களப்பணியாளர்கள் ( RWF Staff ) பணியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டது தெரிய வந்தால் அவர் மீது தமிழ்நாடு மின் வாரிய எழுத்துத்துறையல்லாத பணியாளருகளுக்கான நிலையாணைகளின் படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அலுவலர் ( Class-I and II ) பணியில் ஒழுங்கினமாக நடந்து கொண்டது தெரிய வந்தால் அவர் மீது தமிழ்நாடு மின் வாரிய ஒழுங்குமுறை மற்றும் மேல் முறையீட்டு விதிகளின் ( TNEB DISCIPLINE AND APPEAL REGULATIONS ) ( TNEB D&A REGULATIONS ) படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரு பணியாளர் அல்லது அலுவலர் பணியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டது தெரியவந்தால் அவரது உடனடி மேலதிகாரியோ ( Immediate Superior Officers ) அல்லது உயரதிகாரியோ அவரிடம் அவரது ஒழுங்கீன நடவடிக்கை தொடர்பாக விளக்கம் கேட்க வேண்டும் ( Calling of Preliminary Explanation ) . அவ்வாறு விளக்கம் கேட்டு குறிப்பாணை ( Memo ) வழங்கும் போது அதனை அவர் பெற்றுக் கொண்டதற்கான நாளிட்ட கையொப்பமிட்டு பெறும் ஒப்புகைச்சீட்டு (

Dated Acknowledgement ) பெற்றுக் கொள்ள வேண்டும்.

பணியாளர் பணிக்கு வராத பட்சத்தில் அவ்வாறு நேரடியாக விளக்கம் கேட்டு குறிப்பாணையை வழங்க இயலவில்லை என்றால் அதனை பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து விட்டு அதற்கான அத்தாட்சியை கோப்புகளில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

மாநிலப் பணியாளர்கள் ( Provincial staff )பணியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டது தெரிய வந்தால் அவர் மீது தமிழ்நாடு மின் வாரிய எழுத்தர் துறை பணியாளர்களுக்கான நிலையாணைகளின் படி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு மின் வாரிய எழுத்தர் துறை பணியாளர்களுக்கான நிலையாணைகள் ( Standing orders for clerical workman ) புத்தகத்தில் பக்கம் எண் 15,16,17,18 இல் குறிப்பிட்டுள்ள ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபட்டால் நிலையாணைகள் 19(i) அல்லது 19(ii) அல்லது 19(iii) என ஒழுங்கீனச் செயல்களுக்கு தகுந்த படி நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாடு மின்வாரிய கள பணியாளர்கள் ( RWE Staff ) பணியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டது தெரிய வந்தால் அவர் மீது தமிழ்நாடு மின்வாரிய எழுத்துத்துறையல்லாத பணியாளர்களுக்கான நிலையாணைகளின் படி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாடு மின்வாரிய எழுத்துத்துறையல்லாத பணியாளர்களுக்கான நிலையாணைகள் ( Standing orders for non-clerical workman ) புத்தகத்தில் பக்கம் எண். 21, 22, 23, 24, 25 இல் குறிப்பிட்டுள்ள ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபட்டால் நிலையாணைகள் 30(l) அல்லது 30(ii) அல்லது 30(iii) ஒழுங்கீனச் செயல்களுக்கு தகுந்த படி நடவடிக்கை எடுக்கப்படும்.

அலுவலர்கள் ( Class-I and II ) பணியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டது தெரிய வந்தால் அவர் மீது ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீட்டு விதிகள் ( TNEB D&A REGULATIONS ) படி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் அதாவது தமிழ்நாடு மின்வாரிய ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீட்டு விதி எண் 8(a) அல்லது 8(b) இன் படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாடு மின் வாரிய ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீட்டு விதிகள் ( TNEB D&A REGULATIONS ) புத்தகத்தில் பக்கம் எண் 12, 13, 14, 15 இல் குறிப்பிட்ட படி ஒழுங்கீனச் செயல்களுக்கு தகுந்த படி நடவடிக்கை எடுக்கப்படும்.

தொடரும்....

## ஆகஸ்ட் புரட்சி....!

ஒன்றிய அரசின் மின்சார சட்ட திருத்த மசோதாவை கைவிடக்கோரி கடந்த இரண்டு வருடங்களாக அகில இந்திய பட்டயப் பொறியாளர்கள் சம்மேளனம் (AIFOPDE) அங்கம் வகிக்கும் தேசிய மின்வாரிய பணியாளர்கள் கூட்டமைப்பு (NCCOEEE) விடுத்த அழைப்பை ஏற்று நாடு முழுவதும் தொடர் போராட்டங்களை நடத்தியதன் விளைவு மின்சார சட்ட திருத்த மசோதா நிறைவேற்றுவது தள்ளிப்போனது. இந்நிலையில் நடைபெற்ற பாராளுமன்ற கூட்டத்தொடரில் கடந்த ஆகஸ்ட் 8 ஆம் தேதி இந்த மசோதாவை தாக்கல் செய்தது.

இச்சட்டத்தினை திரும்ப பெறக்கோரி நாடு முழுவதும் எல்லா மாநில மின்வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வேலை புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பின் முடிவின்படி அனைத்து தொழிற்சங்கங்களும் அலுவலகத்தில் கையொப்பம் இட்டுவிட்டு வேலையை புறக்கணித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை பொறியாளர் சங்கம் தமிழகம் முழுவதும் அனைத்து சங்கங்களையும் ஒருங்கிணைத்து நடத்தியது. அதே நேரம் பெரும்பாலான விவசாயிகளும் தமிழகத்தில் நிறைய இடங்களில் போராட்டம் நடத்தினர். தொழிற்சங்க கூட்டுக் குழு தமிழ்நாடு பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து மின்சார சட்ட திருத்த மசோதாவை எதிர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்ததை தொடர்ந்து, அன்றைய தினம் பாராளுமன்றத்தில் தமிழகத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மிகக் கடுமையாக எதிர்த்தனர். இவற்றின் காரணமாக பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மின்சார சட்ட திருத்த மசோதா, நிறைவேற்றபடாமல், பாராளுமன்ற நிலை குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.இது நமது ஒற்றுமைக்கு, போராட்டத்திற்கு கிடைத்த தற்காலிக வெற்றியே. நம் தொடர் போராட்டமும், ஒற்றுமையும் மட்டுமே நம் எதிர்காலத்தை முடிவு செய்யும்.

**முனைவர்.சா.சம்பத்**
தென் மண்டலத் தலைவர்
அனைத்து இந்திய மின்வாரிய பட்டயப் பொறியாளர்கள் சங்கம்.

## பணிப்புறக்கணிப்பு போராட்டம்

கடந்த 08.08.2022 தமிழ்நாடு மின்சார தொழிற்சங்க வரலாற்றில் புதுமையான ஒரு மைல்கல். இது வரையில் எத்தனையோ போராட்டங்களை தொழிற்சங்கங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நடத்தி இருக்கின்றன. ஆனால் இந்த போராட்டம் "பணிப்புறக்கணிப்பு" போராட்டம் ஒரு வித்தியசமான போராட்டம் பொறியாளர் சங்கமே இதற்கு முன்னால் 03.04.1995 அன்று வாரிய தலைமையகத்தில் நடத்தியப்போராட்டம். 12.12.2000 அன்று பொறியாளர் சங்கம் தலைமையேற்று அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றுகூடி தனியார்மயத்தை எதிர்த்து நடத்தப்பட்ட ஒரு போராட்டம் போன்ற பல போராட்டங்கள் இருக்கலாம்.

சமீபகாலத்தில் கூட தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டுகுழு சார்பாக காத்திருப்பு போராட்டத்தை நடத்தி அதில் சிறப்பான வெற்றியையும் கண்டோம், அதுவும் இந்த தமிழ்நாடு மின்சார வாரிய தொழிற்சங்கங்களின் வெற்றி பாதையில் ஒன்று. ஆனால் தற்போது புதுமையாக பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஏன்? இதை வேறு சில நிறுவனங்களில் கூட, இன்னும் சொல்ல போனால் அயல் நாடுகளில் கூட போராட்டங்களை வித்தியாசமாக நடத்துவார்கள். உதாரணத்திற்கு பார்த்தால் காலணி தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் தனது கோரிக்கைகளை வலியுறுத்தி இரண்டு கால்களின் காலணிகளை தயாரிக்காமல், ஒரு காலின் காலணியை மட்டும் தயாரித்து அதன் வாயிலாக அந்நிறுவனத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்தி நிர்வாகத்தை உணரச் செய்வது போன்ற போராட்டங்கள் எல்லாம் அரங்கேரியுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியத்திலே 08.08.2022 அன்று நடத்தப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொழிற்சங்கங்களுக்கு மிகப்பெரிய வெற்றி என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றுகூடி, அனைத்து பொறியாளர்கள், அலுவலர்கள், தொழிலாளர்கள், பாகுபாடின்றி தலைமைப் பொறியாளர்கள் முதல் கடைநிலை தொழிலாளர்கள் வரை ஒற்றுமையுடன் ஒரு போராட்டத்தை முன்னெடுத்து அதில் வெற்றியும் அடைந்துள்ளோம். வெற்றி என்றால் எப்படி என்று கேட்கறீர்களா? நாடாளுமன்றத்தில் இன்றைய காலகட்டத்திலே ஒருதலைபட்சமாக ஒன்றிய அரசு எடுக்கின்ற ஒவ்வொரு முடிவிற்க்கும் அங்கே ஒப்புதல் பெறப்படுகின்றது. எவ்வளவு பெரிய எதிர்ப்புகள் இருந்தாலும், எதிர்கட்சிகள் எவ்வளவு

எதிர்ப்புகள் தெரிவித்தாலும், யார் எவ்வித விவாதமின்றி ஒன்றிய அரசால் முன்மொழியட்டும் அனைத்தையும் சட்டமாக்குவது என்ற ஜனநாயக விரோத போக்கினை சமீபகாலமாக ஒன்றிய அரசு முன்னெடுத்து வருகிறது.

அதுவும் இந்த மின்சாரதுறையை பொருத்தவரை உத்திரபிரதேசத்திலே ஒரு போராட்டத்தை நடத்தி பணியார்களுக்கும், பொதுமக்களுக்கும் ஒரு பாதிப்பு வரும் என்ற நிலை ஏற்பட்ட போது அங்கே மின்சாரத்தை துண்டித்து, அங்கே இருக்கக்கூடிய பணியாளர்கள் பொறியாளர்கள் ஒரு போராட்டத்தை கையில் எடுத்து அதில் வெற்றியும் கண்டார்கள்.

அதேபோல் காஷ்மீரில் உள்ள மின்வாரிய தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்த போது, ஒன்றிய அரசு இராணுவத்தை வைத்து அடக்குமுறையை கையில் எடுத்தது அதிலும் பொறியாளர்கள், தொழிலாளர்களின் ஒற்றுமை உணர்வால் 24 மணி நேரத்தில் ஒன்றிய அரசு தனது நடவடிக்கைகளில் பின்வாங்கி பணிந்தது. இது போன்ற எத்தனையோ போராட்டங்கள் பல கோணங்களில் இருந்தாலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கடந்த 08.08.2022ல் அத்தனை பணியாளர்கள், தொழிலாளர்கள், பொறியாளர்கள் என அனைவரும் ஒன்றுபட்டு யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் அகிம்சை வழியில் ஒரு போராட்டத்தை கையில் எடுத்து அதில் வெற்றி கண்டுள்ளோம்.

வெற்றி என்று சொன்னால், அன்று நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட மின்சார சட்ட திருத்தத்தை எதிர்த்து, எதிர்கட்சிகள் வன்மையாக கண்டித்தும், பெரும்பான்மை பலத்துடன் திகழும் ஆளும் கட்சி சட்டமாக்க முடியாமல் அதை நாடாளுமன்ற நிலை குழுவிற்கு அனுப்பியது. எதிர்கட்சிகளின் எதிர்ப்பிற்கும் மேலாக, இந்தியா முழுவதும், உள்ள மின்துறையில் பணியாற்றும் பொறியாளர்கள், தொழிலாளர்கள் என அத்தனை பணியாளர்களும் ஒன்று சேர்ந்து அகிம்சை வழியில் கரம் கோர்த்து ஒற்றுமை உணர்வுடன் மேற்கொண்ட போராட்டம்தான். மின்சார சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்ற நிலைக்குழுவின் பக்கம் திரும்பச்செய்துள்ளது.

மேலும் மின்சார சட்டத்திருத்த மசோதாவால் பொதுமக்களுக்கும், பணியாளர்களுக்கும், பாதிப்பு ஏற்படுமானால் அது ஒன்றிய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி பணியாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் ஒற்றுமை உணர்வால், வெற்றி வாகை சூடிய மேற் கண்ட போராட்டத்தை போல் எந்த காலகட்டத்திலும் நம் ஒற்றுமையினால் சாதிக்க முடியும் என்பதற்கு நமது போராட்டம் ஒரு எடுத்துக்காட்டாகும்.

நமது போராட்டத்தை வெற்றி அடைய செய்த அனைத்து பொறியாளர்கள், பணியாளர்கள், மற்றும் தொழிற்சங்கங்களுக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றம் ஒன்றே மாறாதது என்று சொல்வார்கள். இன்று நம்முடைய மின்வாரிய தொழிற்சங்கங்களின் போராட்டகளமும் மாறுபட்டது. அந்த களமும் வென்றுள்ளது இதற்கு முக்கியமான ஒரு காரணம், போராட்டம் அறிவிக்கப்பட்டு 12 மணி நேரத்திற்குள் அதுவும் விடுமுறை நாளன்று மாலை தொழிற்சங்க கூட்டுக்குழு கூடி முடிவெடுத்து, இப்படி ஒரு போராட்டத்தை நடத்த வேண்டும் என்று சொன்ன பிறகு அந்த 12 மணி நேரத்தில் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து ஒருங்கிணைந்து செயல்பட்டுள்ளோம் என்று சொன்னால் அது தான் மிகப்பெரிய வெற்றி என்பதை இந்த இடத்தில் அழுத்தமாக பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நன்றி

பொர்.R.**சுந்தர்ராஜ்**

மாநில துணைத்தலைவர்/மின்னியல்

## TANGEDCO leaps on Hi Tech mode

This morning I applied for new service connection online for my farm house at Bhavani.What followed in next few minutes turned out to be a sweet surprise. The damand was raised next moment with payment link sent to my mail. On payment , the concerned AEE Er.Janardhnan made his apperance on spot with I pad on his hand. By that time the SC had been sanctioned thanks to the advent of ERP. The AEE mapped the new SC on the GIS platform through his I Pad with default integration with LT billing software. The IDs of Pole, DT, feeder etc were all mapped with co ordinates of SC location. The meter was simultaneously fixed and the light was lit.

All happened in a flash that made me wonder if it was a same day service or same hour service!

I must say that as a significant breakthrough, the online processing, digital transaction, ERP , GIS tools..all combined to make big difference raising the Standard of Performance of TANGEDCO to a new level. What is more remarkable is that the TANGEDCO engineers are equal to the task of growing expectations of the digital world .It goes to prove a point that we are no way behind the private corporates in terms of technological advancement.

My hearty congrats to the CMD / TANGEDCO who spearheads the online and digital revolutions in the organisation adding value to the customer service and my heartfelt commendation to the ERP and GIS teams to have made big strides in their respective domains and all TANGEDCO engineers for displaying best practices with their skill by leveraging the growing technologies.

With best wishes,
M.Chandrasekar.
Chairman/ TNERC.

# திருமண அழைப்பிதழ்

**திரு.திருப்பதி – கஸ்தூரி** ஆகியோரின் மகன் திருநிறைச்செல்வன்.
**Er.T.விஷ்ணு பாலா,B.E.,** TA/TNEB/CHENNAI என்ற மணமகனுக்கும்

**திரு.சுரேஷ் குமார் – முருகபூபதி** ஆகியோரின் மகள் திருநிறைச்செல்வி.
**Er.S.தமிழரசி, B.E., (Bank of India Kuntrakudi)** என்கிற மணமகளுக்கும்

05.09.2022 திங்கட்கிழமை, ராஜபாளையம், தென்றல் நகரில் அமைந்துள்ள
**ஸ்ரீ லட்சுமி சுந்தர மஹாலில்** நடைபெறும் திருமணத்திற்கு
அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

தங்கள் அன்புள்ள
**Er.T.விஷ்ணு பாலா,B.E.,**
TA/TNEB/CHENNAI NORTH

மின் அலை வளர்ச்சி நிதி ரூ.1000/– அளித்துள்ளார், நன்றி...

## *Wedding Invitation*

*Mrs. Vanathi Karunakaran*
*&*
*Mr. M.Karunakaran, B.Tech.,*
(Junior Engineer / TANGEDCO / West / Devikapuram)

***We cordially solicit your esteemed presence with family and friends on the auspicious occasion of the marriage of our daughter***

*Selvi. K.Vinothini, B.E.,*
*with*
*Selvan. C.Rajakumaran, M.E.,*
Scientist/Engineer'SD,SDSC,ISRO, SRIHARIKOTA,
S/o Mr.M.Chenkuttuvan, TNPL,(Retd) & Mrs.C.Menaka, Vellore

***on Wednesday 7th September 2022, between 6.00 a.m to 7.30 a.m***
***at Somasundaram Sakunthala Mahal, Arni-Arcot Road (Near ACS College)***

| Reception | Subha Mukurtham |
|---|---|
| *06.09.2022 Tuesday 6.30 p.m.onwards* | *07.09.2022 Wednesday 6.00 a.m to 7.30 a.m* |

*with best Compliments From:*
*K.Naveen Vignesh, M.E., (Yield Engg Systems,Coimbatore)*

மின் அலை வளர்ச்சி நிதி ரூ.1000/– அளித்துள்ளார், நன்றி...

**சங்கநாதம் ஓய்ந்தது**

போய் வா சங்கப் புலவரே.....!
சங்கத்தின் கவி நாதம் மறைந்தது சத்தமில்லாமல்.....!
ஒரு தலைமுறை புதைத்தாலும் ஒரு வரலாற்றை விதைத்து சென்றுள்ளார் புலவர்.....!
உன் காந்த குரல் கேட்டு.....!
உன் புரட்சிக் கவிதை வாசித்து.....!
வளர்ந்தோம் நாங்கள்.....!
சங்கத்தில்.....!
எங்கள் படைப்பும் செயல்பாடும்.. முதல் காரணம் நீயே.....!
சங்கம்... வேர்விட்டு வளர்ந்து ஒரு விருட்சமாக விரிந்து பலர்
வாழ்வுக்குப் பேரும் நிழலாக அமைய... தஞ்சையில் நீ செய்த தியாகமே முற்றிலும் காரணம்.....!
பட்டயப் பொறியாளனை... அவமதித்தார்கள்.....!
ஏன் என்று கேட்டாய்... சங்க இதழில்.....!
தஞ்சையில் உன் சங்க பணி கண்டு.....!
குண்டர்கள் தாக்கினார்கள்... நீ காயம் பட்டாய்... சங்கம் ஆகாயம் தொட்டது.....!
ஆரவாரம் செய்த மாற்று சங்க நச்சுக் கிருமிகளைச் செயல் இழக்க செய்தவன் நீ.....!
ஒளி நிலவாய் ஒளி தந்து பல பட்டயப் பொறியாளரின்...
அறிவு என்னும் விளக்கினை ஏற்றியவன் நீ.....!
கடைசியாக தஞ்சையில் நடைபெற்ற சங்க பொன் விழாவில் உன் பேச்சும்... உன் கவியும்...
நான் ரசித்து பெருமைப்பட்டேன்.....!
என் ஆசானே.....!
உன்னால் தான் நான் கவிதை எழுதினேன்.....!
உன்னால் தான் நான் கட்டுரை எழுதினேன்.....!
உன்னால் தான் நான் சங்கப் பணியாற்றினேன்.....!
ஆனால் நீ சென்றுவிட்டாய்... எங்களிடம் எதுவும் சொல்லாமல்.....!
சங்கத்தின் சரித்திரத்தில்... நீங்கா இடம் பெற்ற நம் முன்னோர்கள் வரிசையில்.....!
கம்பீரமாய் இடம் பிடித்தாய்.....!
இனி உன் புகழ் யார் மறந்தாலும் சங்கம் உன் புகழ் பாடும்.....!
போய் வாருங்கள் **புலவர் மு.சு.அரசன்** அவர்களே.....!
உங்கள் புகழ் பாட.....! சங்கம் இருக்கிறது.....!
என்றும்... என்றென்றும்.....!

**முனைவர்.சா.சம்பத்**
தஞ்சை மண்டலச் செயலாளர்

**பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்.**

கீழ்கண்ட பொறியாளர்கள் **31.07.2022** அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்**.**

**Er. J.Davidraj,** AEE/Shift/230 KV SS Singarapet. GCM / Vellore Branch. ✆: 9789138188

**Er. B.Nandha Kumar,** AEE / PRO / Chennai North. Branch President Chennai North Branch. ✆: 9443525997

**Er. R.Sekar,** AEE / SSE/GCC / TANTRANSCO. Organising Secretary CDC Branch.

✆: 8637632113

**Er. A. Subbiah**,AEE / R&M / TTPS Former Secretary /Generation TTPS Branch.

✆: 9362934170

**Er. S.Kannan,**EE / O&M / Arakkonam. Former BS / Dharmapuri Branch.

✆: 9994304179

**Er. V.Veeramani,** JE / MRT / Thiruvarur. Former Branch Treasurer Thiruvarur Branch.

✆: 7904748244

**Er. S.Nallarkaniyan,** AE / O&M / Rural Dharmapuri. Former Treasurer / Dharmapuri Branch. ✆: 9600728806

**Er. R.Gunaseelan,** EE / O&M / North Kumbakonam. Thanjavur Branch. ✆: 9443447532.

**Er. T.Rajaram**, EE / O&M / Thirukoilur. Kallakurichi Branch. ✆: 6382437293

**Er. G.Ramadoss**, EE / O&E / NCTPS2. NCTPS Branch. ✆: 7010113141

**Er. M.Nagarajan,** AEE / Mtce. / 230KV SS Athipet. Chennai North Branch.

✆: 8903476218

**Er. T.Mahendravarman,** AEE / Shift / 400 KV SS Anaikadavu. Udumalpet Branch.

✆: 94439 36740

**Er. M.Selwyn Joshua,** AEE / Shift / 230 KV SS / Echur. Thiruvannamalai Branch.

✆: 9443438282

**Er. A.S.Tennyson Fernando,** AEE / Mech. / ETPS. NCTPS Branch.

✆: 98406 78030

**Er. K.Vijayamoorthy,** JE1 / O&M / Town East Pudukottai. Pudukkottai Branch.

✆: 9842406306

**Er. J.Sundaresan,** JE1 / SCADA / TrichyTrichy Branch. ✆: 9994994020

# கண்ணீர் அஞ்சலி

25.07.2022 **புலவர்.மு.சு.அரசன்**, முன்னாள் மையப்பொறுப்பாளர்/EDHA **அவர்கள்.**

25.07.2022 **பொர்.A.முத்துசாமி**, உதவி செயற்பொறியாளர்/இயக்கம்/செக்கானூர் பேரேஜ் **அவர்கள்.**

26.07.2022 **பொர்.A.தண்டபாணி**, இளமின்பொறியாளர்/மேற்கு/பிரம்மதேசம்/ திருவண்ணாமலை கிளை **அவர்கள்.**

**மறைவிற்கு பொறியளார் சங்கம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளரை இழந்து வாடும் குடும்பத்திற்கு பொறியாளர் சங்கம் தனதுஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துகொள்கிறது.**

01.07.2022 பொர்.M.ஜெய்கிங், இளமின்பொறியாளர்/CHP2/MTPS–1 MTPS கிளை அவர்களின் **தாயார்**. 9003680140

25.07.2022 பொர்.C.வெங்கடேசன், உதவிப்பொறியாளர்/எசனை பெரம்பலூர் கிளை அவர்களின் **தாயார்**. 9445853656

29.07.2022 பொர்.K.மணி, உதவிப்பொறியாளர்/O&E/MTPS–1 MTPS கிளை அவர்களின் **தாயார்**. 9489993459

31.07.2022 பொர்.S.ஜனார்த்தனன், உதவி செயற்பொறியாளர்/முறைப்பணி/230கி.வோ. /அரியபெரும்பாக்கம் காஞ்சிபுரம் கிளை அவர்களின் **தந்தையார்**. 9443073108

12.08.2022 பொர்.S.பழனிவேல், முன்னாள் இணைச் செயலாளர்/கரூர் கிளை அவர்களின் **தாயார்**. 8667065508

17.08.2022 பொர்.பாஸ்கர், இளமின்பொறியாளர்/சிறப்பு பராமரிப்பு/விழுப்புரம், கோ.செ./விழுப்புரம் இயக்கம் கோட்டம் அவர்களின் **தந்தையார்**. 9443668103

18.08.2022 பொர்.J.R.நளினிஸ்ரீ, உதவி செயற் பொறியாளர்/பராமரிப்பு/230கி.வோ./ G.B.புதூர்/ கோபி அவர்களின் **தாயார்**.

19.08.2022 பொர்.S.முனியசாமி உதவி செயற்பொறியாளர் / கயத்தார். துணைத் தலைவர்/ தூத்துக்குடி அவர்களின் **தந்தையார்**

22.08.2022 பொர்.R.பத்மினி, இளமின்பொறியாளர்–2ம் நிலை/கீழகுப்பம் துணை மின் நிலையம்/கடலூர் கிளை அவர்களின் **தந்தையார்.** 9791139003

25.08.2022 பொர்.S.திருவடிசேகர், இளமின்பொறியாளர்(ஓய்வு) அவர்களின் **தாயார்**. 8056412277

**ஆகியோர் இயற்கை எய்தினார்கள், குடும்பத்தினரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.**

## TRIBUTES TO SANGAM's MAHAKAVI



We all know about the great poet Mahakavi Bharathiar who was not only a poet but an Activist of Indian Independence and Social Reformer. Sangam too boasted a Poet cum Activist of such calibre who penned and spoke for the Diploma Community, inspiring the community and fought aggressively for its upliftment.

Beloved Er. M.S.Arasan fondly addressed as **புலவர்.மு.சு.அரசன்**.former Joint Secretary of Engineering Diploma Holders Association - EDHA was that legendary poet who passed away on 25.07.22 due to illness. A native of erstwhile South Arcot District had served the Board in various places at Thanjavur, Nagai, Pudukkottai and Moyar including his hometown.

Basically a Diploma Holder, Legendary Stalwart graduated from Alagappa University when he had a chance to study Engineering Degree while working at Pudukkottai circle and retired as an Assistant Executive Engineer from Board's Service. A vibrant leader had numerous admirers throughout the State who were inspired by his poetry and oration.

Those days there wasn't any recognition for the Diploma Community in the Board hence EDHA had to be aggressive akin to a militant organisation to wrest the rights for its members and community in getting promotions, wages and much more. Beloved Stalwart was a forefather in that aspect spearheading the attack in the places he worked, leaving a mark.

He was a master in handling issues by his astute thinking, aggressive and shrewd representation yet nonchalant attitude once accomplished. His oration drew large crowds among the community and has vivid followers for his poems even today. His welcome letter to the new recruits of our community was a trademark and treasured by many even today.

Legendary Stalwart was the architect behind the formation of Thanjavur Branch and did a lot of work in that circle undeterred even when physically assaulted by other unions. Many times due to his tough stance with the management during representations and discussions he was punished and made to suffer personally. Numerous punishments due to Union activities led to missing many promotions and sufferings which he took sportingly.

Yet he kept vigil in safeguarding the rights of the Diploma Community which was his sole vision. Once beloved sir took up the responsibility of publishing "Why" (then magazine of EDHA) when need arouse for shifting the publication from Nellai during the year 1984 even though it could be done for a short period only.

His electrifying welcome address to welcome then respected Chairman Thiru. B.Vijayaraghavan I.A.S. during the meeting organised at Villupuram for KBF's 1st benevolent disbursement and a vibrant speech delivered at Headquarters on 03.04.1995 sit-in agitation would remain in the history forever.

Even though he didn't hold any post at Central Unit in the aftermath of the merger of EDHA and TNEBES in the year 1987, he was active always. Post retirement too legendary stalwart had been actively involved in our activities. He graced the occasion of the Bhoomi Pooja of Sangam Building at Villupuram in 2015 and the 50th Annual General Council Meeting at Kodaikanal in 2016. Despite his ill health he had planned to attend the Golden Jubilee General Body Meeting of Thanjavur Branch last May, but dropped it after his Physician's advice.

Acceding to our Sangam's call legendary stalwart had contributed a mammoth amount of Rs.30K towards KBF Special Donation few months ago with a message emphasising KBF's importance, which speaks volumes of his care, affection and affinity towards our community and our Sangam.

It's very sad we lost such a legendary stalwart of our Sangam who has been part and parcel of our activities for more than 5 decades. Yet it's a consolation that sir has left a legacy filled with his writing, preaching, following and much more for us. His dedication is unparalleled leaving a priceless asset to our community.

Rest in Peace Respected Sir, you will remain in our heart and soul forever.

**Er.A.Antony Padovaraj**
State President

**MIN ALAI - August -2022   RNI No. TNBIL / 2012 / 47622**

**Printed Book Periodical**



**பாராளுமன்றத்தில் மின்சார சட்டம் தாக்கல் செய்வதை கண்டித்து சென்னை தலைமையகத்தில் 08.08.2022 அன்று மின் ஊழியர்களின் பணிமுடக்க போராட்டத்தில் நமது பொதுச் செயலாளர் எழுச்சி உரையாற்றுகிறார்.**



12.08.2022 அன்று தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் 17வது மாநில மாநாட்டில் நமது பொதுப் பொருளாளர் வாழ்த்துரை வழங்கினார்.



**Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002. Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18, Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079. Edited by : R.Santhoshkumar**